வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 15.08.2022 திங்கட்கிழமை | இதழ் : 251 | பக்கங்கள் : 16

# அமைப்புக்கள் மீதான தடை நீக்கம் இலங்கையின் சுயநலன் சார்ந்தது!

## ஐ.நாவின் அழுத்தத்தை சமாளிக்கவே என்கிறது உலகத் தமிழர் பேரவை




லண்டன், ஓகஸ்ட் 15

புலம்பெயர் அமைப்புக்களின்மீதான தடை நீக்கம் இலங்கையின் சுயநலன் சார்ந்தது என்று விமர்சித்துள்ளது உலகத் தமிழர் பேரவை.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் செப்ரெம்பர் மாத அமர்வு மற்றும் சர்வதேச அழுத்தங்களை எதிர்கொள்வதற்காகவே இந்தத் தடை நீக்கப்பட்டது என்று அந்த அமைப்பின் செய்தித் தொடர்பாளர் சுரேன் சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

15

## குடும்பஸ்தர் அடித்து கொலை; இரண்டு இளைஞர்கள் கைது!

மட்டக்களப்பு, ஓக. 15

மட்டக்களப்பு மாநகரில் குடும்பஸ்தரை பொல்லால் தாக்கிக் கொன்றனர் என்ற சந்தேகத்தில் இரு இளைஞர்களை தாம் கைது செய்துள்ளனர் என்று மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

களுவாஞ்சிக்குடி -பெரியபோரதீவு - முனைத்தீவைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான வல்லிபுரம் அன்பழகன் (வயது - 53) என்பவர் கடந்த 11ஆம் திகதி சடலமாக மீட்கப்பட்டார். மட்டு. நகர் லொயிஸ் அவனியூர் வீதியில் மதுபான விற்பனை நிலையம் அருகே இவரின் சடலம் மீட்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்திய பொலிஸார் அப்பகுதியிலுள்ள சி. சி. ரீ. வி.

15

## இலங்கைப் பெற்றோரின் மகளுக்கு இந்திய கடவுச்சீட்டு வழங்க பணிப்பு

மதுரை, ஓக. 15

இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்ற இலங்கை பெற்றோருக்கு 1986ஆம் ஆண்டு மண்டபம் அகதிகள் முகாமில் பிறந்த பெண்ணுக்கு இந்திய குடியுரிமை சட்ட விதிகளின்படி இந்திய குடிமகள் என்பதால் அவருக்கு இந்திய கடவுச்சீட்டை வழங்க இந்திய உயர் நீதிமன்ற மதுரைக்கிளை உத்தரவிட்டுள்ளது.

திருச்சி - கொட்டப்பட்டு இலங்கை அகதிகள் முகாமில் தற்போது வசித்து வரும் நளினி என்பவர் உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மனு ஒன்றை தாக்கல் செய்திருந்தார்.

அதில், "எனது பெற்றோர் இலங்

15

## செஞ்சோலை படுகொலை அஞ்சலி நிகழ்வில் குழப்பம்!

யாழ்ப்பாணம், ஓக. 15

செஞ்சோலை மாணவர்களின் படுகொலை நினைவேந்தலை நேற்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அனுஷ்டிக்க முற்பட்டபோது குழப்ப நிலைமை ஏற்படுத்தப்பட்டதாக அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு - வள்ளிபுனம் செஞ்சோலை இல்லம் மீது வான்படையின் தாக்குதலில் கொல்லப்பட்ட 61 மாணவர்களின் 16ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்றாகும். இந்த நினைவேந்தலை நேற்று உடுவில் ஆலடியில் அனுஷ்

15

## ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு அமைச்சரவையில் இடமில்லை!

### ஜனாதிபதி ரணில் விடாப்பிடி

கொழும்பு, ஓக. 15

ராஜபக்ஷ குடும்பத்தை சேர்ந்த எவருக்கும் புதிய அமைச்சரவையில் பதவிகள் எதுவும் வழங்கப்பட மாட்டாது. இதில் ஜனாதிபதி ரணில் உறுதியாக இருக்கிறார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

நியமிக்கப்படவுள்ள புதிய அமைச்சரவையில் ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த எவரும் நியமிக்கப்பட மாட்டார்கள் என்பதில் ஜனாதிபதி உறுதியாக உள்ளார்.

15

## விகாரைகளுக்கு செல்வதற்கு அனுமதி கேட்ட கோட்டாபய!

கொழும்பு, ஓக. 15

தாய்லாந்தில் தஞ்சம் புகுந்துள்ள கோட்டாபய ராஜபக்ஷ பௌத்த விகாரைகளுக்கு சென்று வழிபடுவதற்கு அந்த நாட்டின் அரசாங்கத்தின் அனுமதியை கேட்டுள்ளார்.

எதிர்ப்பு போராட்டத்தை அடுத்து நாட்டிலிருந்து தப்பிச் சென்ற முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தற்போது தாய்லாந்தில் தங்கியுள்ளார்.

15

## நாடு முழுவதும் மீண்டும் மருந்துகளுக்கு தட்டுப்பாடு!

கொழும்பு, ஓக. 15

நாடு முழுவதும் உள்ள மருத்துவமனைகளில் மீண்டும் அத்தியாவசிய மருந்து பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த நிலைமை காரணமாக மருத்துவமனைகளில் சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ள முடியாத நிலைமை காணப்படுகின்றது என்று அந்த சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஹரித அலுத்கே தெரிவித்துள்ளார். (ஐ)

## கோட்டாபயவை சிங்கப்பூர் வெளியேற்ற காரணம் என்ன?

கொழும்பு, ஓக. 15

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவுக்கு உயிருக்கு ஆபத்து இருந்தது. அவர் சிங்கப்பூரில் தொடர்ந்து தங்கியிருப்பது தமது நாட்டின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் என்பதாலேயே, அவரை அந்த நாடு வெளியேற்றியது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த ஜூலை 9ஆம் திகதி ஜனாதிபதி மாளிகை போராட்டத்தை தொடர்ந்து அப்போ

15

## மீண்டும் இறக்குமதி கட்டுப்பாடு!

கொழும்பு, ஓக. 15

நாட்டின் டொலர் பற்றாக்குறை மேலும் மோசமடையக்கூடும் என்பதால் அத்தியாவசியமற்ற பொருட்களின்

15

## ஐரோப்பாவின் எச்சரிக்கையால் நெருக்கடி நிலையில் இலங்கை!

கொழும்பு, ஓக. 15

மக்களின் கருத்துச் சுதந்திரத்தில் தலையிடும் பட்சத்தில், ஜி. எஸ். பி. பிளஸ் வரிச் சலுகை விலக்கிக் கொள்ளப்படும் என்று ஐரோப்பிய ஒன்றியம் அரசாங்கத்தை எச்சரித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்த நிலைப்பாடு, சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு ஆதரவு வழங்குவதிலும், ஐ. நா. மனித உரிமைகள் பேரவையிலும் இலங்கைக்கு பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் தூதுவர்களின் சிறப்பு குழு ஜனாதிபதி

15

## இலங்கையில் நீதி கிடைப்பது மிகஅரிதானதாகவே உள்ளது!

### போராட்டத்தை கைவிடேன் என்கிறார் பேராயர்



கொழும்பு, ஓக. 15

இலங்கையில் நீதி கிடைப்பது அரிதாகவே காணப்படுகிறது. அரசியல் தலைவர்கள் சட்டத்தில் தலையிடுவதே இதற்குக் காரணம் - என்று கர்தினால் பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

ஏற்கனவே இந்தப் பத்தியில் சர்வகட்சி அரசாங்கம் அமைவதற்கான சாத்தியங்கள் குறைந்து வருகின்றன என்பது பற்றி எழுதியிருந்தேன். அந்த யோசனையை ரணில் கிடப்பில் போடலாம் என்ற சந்தேகத்தையும் தெரிவித்திருந்தேன்.

இப்போது அமைச்சரவை விஸ்தரிக்கப்படும்போது அதில் இடம்பெறவேண்டியவர்களின் பெயர்களை தமது கட்சியின் சார்பில் பொதுஜன பெரமுன ஜனாதிபதியிடம் கொடுத்திருப்பதாக ஒரு செய்தி வெளிவந்திருந்தது.

அதுகுறித்து, ஜனாதிபதி தரப்புடன் நெருக்கமான ஒருவரிடம் கேட்டபோது, அவர் சொன்னார், அந்த பட்டியலில் உள்ளவர்களை அமைச்சரவையில் சேர்த்தால் மீண்டும் "அரகலய" தோற்றம் பெற்றுவிடுமோ என்றுதான் ஜனாதிபதி யோசித்துக் கொண்டிருக்கின்றராம் என்றார்.

"அரகலய" காரர்களின் போராட்டம் வெற்றி பெற்றதற்கு முக்கிய காரணம் அப்போது நாட்டு மக்கள் எதிர்கொண்ட நெருக்கடிதான்.

எரிபொருளுக்கு கியூ. எரிவாயு எங்குமே இல்லை. பல மணிநேர மின்வெட்டு என்று நாடே இருளில் மூழ்கிப் போயிருந்த அந்த வேளையில் அரசுக்கு எதிராக மக்களின் மனநிலை கொதிநிலையில் இருந்தபோது, அரகலய அதனைப் பற்ற வைத்தது. அதனால்தான் மக்கள் இலட்சக்கணக்கில் திரண்டு வந்தனர்.

அந்த மக்கள் திரட்சி, அரகலயகாரர்களின் கோரிக்கைகளுக்கானதல்ல, அது மக்களின் தேவைகள் காரணமானது.

இப்போது நிலைமை ஓரளவுக்கு சரிசெய்யப்பட்டிருக்கின்றது. கொழும்பில் எந்த எரிபொருள் நிலையத்திலும், நான்கு, ஐந்து வாகனங்களுக்கு மேல் காணவில்லை. கியூ. ஆர். கோட் முறையில் மட்டுப்படுத்தப்பட்ட எரிபொருளே விற்பனை செய்யப்பட்டாலும், அது எந்த நேரத்திலும் கிடைக்கின்றது.

விலைகளையும் கொஞ்சம் கொஞ்சமாக குறைக்கத் தொடங்கியிருக்கின்றனர். இந்த நேரத்தில் மீண்டும் அரகலய தோற்றம் பெற்றாலும் மக்கள் திரட்சியாக வரப்போவதில்லை என்று நம்பும் மகிந்த தரப்பு, தமது பழைய விசுவாசிகளையே அமைச்சரவைக்கு நியமிக்க விரும்புகின்றதாம்.

சர்வகட்சி அரசில் இடம்பெற பெரும்பாலான எதிர்க்கட்சிகள் முன்வராததால், அமைச்சரவையை விஸ்தரிக்கும் போது தமது ஆட்களையே நியமிக்க மகிந்தர் விரும்புகிறார் எனத் தெரிகின்றது.

ஏற்கனவே அமைச்சரவையில் இடம்பெற்றிருப்பவர்களில் ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து வந்த ஹரின், மனுஷ, மற்றும் முஸ்லிம் காங்கிரஸிலிருந்து இருபதாவது திருத்தத்துக்கு ஆதரவளித்த நஷீர் தவிர, ஏனையவர்கள் அனைவருமே பொதுஜன பெரமுன என்ற கட்சியின் மூலம் பாராளுமன்றம் வந்தவர்கள்தான். இவர்களில் இருவர் நிமால் சிறிபால டி சில்வா, மகிந்த அமரவீர ஆகியோர் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்றாலும் அவர்களும் பாராளுமனறத்துக்குள் பொதுஜன பெரமுன எம்.பிக்களாகவே வந்தவர்கள்.

அமைச்சரவை விஸ்தரிக்கப்படும்போது, மற்றைய கட்சிகளிலிருந்து வருபவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பதுதான் ஜனாதிபதியின் விருப்பம் என்கிறார் ஜனாதிபதிக்கு நெருக்கமான அந்தப் பிரமுகர்.

சர்வகட்சி அரசாங்கம் என்றால், அது ஒவ்வொரு கட்சிகளும் தத்தமது சார்பில் யார் இடம்பெறவேண்டும் என்பதை அவர்களே தீர்மானிக்க வேண்டியதுதான். ஆனால், சர்வகட்சி அரசு என்றால் அதில் முக்கியமாக பிரதான எதிர்க்கட்சியும் இடம்பெறவேண்டியது அவசியம். அப்படி இல்லையென்றால் அது உண்மையான சர்வகட்சி அரசாங்கமாக இருக்காது. ஐக்கிய மக்கள் சக்தி உத்தியோகபூர்வமாக சர்வகட்சி அரசில் இடம்பெற மறுக்கின்றபோது, அந்தக் கட்சியிலிருந்து மேலும் சிலர் வெளியேறி அரசில் இடம்பெறலாம் என்று எதிர்பார்க்கப்படுவதால் அது சர்வ கட்சிகளையும் சேர்ந்தவர்களின் அரசாங்கமாகவே இருக்கும். அப்படியொரு நிலை வரும்போது அவ்வாறு வருபவர்களுக்கெல்லாம் அமைச்சுப் பதவி கொடுக்கவேண்டியிருக்கும்.

இந்த வாரம் அல்லது அடுத்த வாரத்தில் புதிய அமைச்சரவை அமைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதால், இந்த நெருக்கடியிலிருந்து எப்படி வெளியே வருகிறார் ஜனாதிபதி என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

- ஊர்க்குருவி.

## வரிசைகள் நீங்கினாலும் பிரச்னைக்கு தீர்வில்லை!

### ஹர்ஷ டி சில்வா எம். பி.

கொழும்பு, ஓக. 15

"எரிபொருள், எரிவாயு வரிசைகள் குறைந்ததால் நாட்டின் பிரச்னைகள் தீர்ந்துவிட்டன என்று பலர் நினைக்கின்றனர். அவ்வாறு இல்லை. பொருளாதார பிரச்னைக்கு இன்னும் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படவில்லை" என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி தலைமையகத்தில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார். மேலும், "பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு குறுகியகால திட்டமொன்றை நாம் அரசாங்கத்துக்கு முன்வைத்தோம்.

புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டு நீண்ட நாட்கள் ஆகின்றன. அவர் இந்த அரசாங்கத்தில் பிரதமராகவும் நீண்ட நாட்கள் செயல்பட்டுள்ளார். எனினும், பாராளுமன்றத்துக்கு இதுவரை எந்த வேலைத்திட்டத்தை முன்வைக்கவில்லை.

அவர் தனது கொள்கை விளக்கவுரையில் பல்வேறு விடயங்களைக் கூறினார்.

ஆலோசனைகளை வழங்கினர். எனினும் என்ன செய்ய வேண்டும் என்பது தொடர்பில் எவ்வித விடயங்களையும் கூறவில்லை. எனவே எதிர்க்கட்சியாக இருந்த பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான வேலைத்திட்டத்தை முன்வைப்பதற்கு நாம் தீர்மானித்தோம்.

பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான உடனடியாக செய்ய வேண்டிய 10 விடயங்களை நாம் முன்வைத்துள்ளோம். அரசாங்கம் பயணிக்கும் பாதை தவறானது என்பதை கடந்த 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்தே நாம் கூறிவருகின்றோம். சரியான பாதையில் செல்ல வேண்டியது அவசியம் என்பதையும் நாம் வலியுறுத்தினோம் - என்றார்.

(கே)

## அரச செலவுகளை கட்டுப்படுத்த விசேட சுற்றுநிருபம் வெளியானது

கொழும்பு, ஓக. 15

அரச செலவுகளை கட்டுப்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சுகளுக்கு பணித்துள்ளார்.

நாடு முகம் கொடுத்துள்ள பொருளாதார சவால்களை வெற்றிகொள்வதற்காக அரச செலவுகளை கட்டுப்படுத்துவது தொடர்பில் கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்குமாறு, ஜனாதிபதியின் செயலாளரால் அமைச்சின் செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான சுற்றுநிருபம் ஒன்றும் சகல அமைச்சுகளின் செயலாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமையவே அவரின் செயலாளரால் இந்த சுற்றுநிருபம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

செலவுகளை கட்டுப்படுத்துவது தொடர்பில் திறைசேரி சுற்றுநிருபத்தை கடுமையாக பின்பற்றுமாறும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

(ஐ)

## மாணிக்க கல் அகழ்வு மூவர் கைதாகினர்!

கொழும்பு, ஓக. 15

நுவரெலியா பொகவந்தலாவை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் அனுமதிபத்திரமின்றி மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட மூவர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டனர்.

பொகவந்தலாவை பிரதேசத்தை சேர்ந்த 28, 37, 38 வயதுகளையுடையவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே குறித்த மூவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(கே)

## களவாடி மறைத்து வைத்த நகைகளுடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஓக. 15

திருடப்பட்டு வீடொன்றில் மறைத்து வைத்த தங்க நகைகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பத்தேகம - ஹல்பதொட்ட பகுதியில் மீட்டியகொட பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது இந்தக் கைது இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு நேற்று தெரிவித்தது.

குறித்த வீட்டில், 8 தங்க வளையல்கள், 5 கழுத்தணிகள், 3 மோதிரங்கள், 3 ஜோடி காதணிகள் மற்றும் 4 கைபேசிகள் கைப்பற்றப்பட்டன. இவற்றின் மொத்தப் பெறுமதி 15 இலட்சம் ரூபாய் என்று கூறப்படுகின்றது.

இந்த நகைகள், கடந்த 2ஆம் திகதி மீட்டியகொட - அளுத்வல பகுதியில் உள்ள வீடொன்றை உடைத்து திருடப்பட்டது. இந்தச் சம்பவத்துடன், தொடர்புடைய 31 வயது நபரும் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

(ஐ)

## தெய்வீக திருக்கூட்ட தொடரில் இன்று!

நல்லூர், ஓக. 03

நல்லைக் கந்தன் ஆலய பெருந் திருவிழாவை முன்னிட்டு நல்லை திருஞானசம் பந்தர் ஆதீனத்தில் சிறப்பு தெய்வீகத் திருக்கூட்டத் தொடர் நடக்கிறது.

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாடு அகில இலங்கை இந்து மாமன்றத்தின் இணை அனுசரணையில் முன்னெடுக்கப்பட்டுவரும் இந்தக் கூட்டத் தொடரில் 14ஆம் நாள் நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெறவுள்ளன.

இன்றைய நிகழ்வு, வண. ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளும் அமெரிக்கா, ஹவாய் சைவ ஆதீனக் குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளின் சீடர், வண. ஆன்மிகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளும் திருமுன்னிலை வகிக்க, யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியல் கல்லூரியின் உபபீடாதிபதி கலாநிதி பா. தனபாலன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில், நல்லூர், பிரதேச செயலர் பிரிவின், சிவபூதவராயர் அறநெறிப் பாடசாலையின் நிகழ்வு ஏற்பாட்டில், அறநெறி பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் அரங்கேற வுள்ளன.

சிறப்பு நிகழ்வுகள் வரிசையில், 'நாவலர் பெருமான் தந்த கல்வி மரபே நம் சமூகத்துக்குத் தேவை' என்னும் தலைப்பில் சிவநெறிச் செம்மல் க. ஈஸ்வரனின் சிறப்புச் சொற்பொழிவும், விஜயகுமார் வத்சாங்கித சர்மாவின் இசைக் கச்சேரி நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

(ஐ)

## யானை தாக்கி ஒருவர் மரணம்!

கொழும்பு, ஓக. 15

பொலநறுவை அரலங்கவில பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கனிச்சாகல காட்டுப் பகுதியில், ஒருவர் காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

ருஹுணுகம அரலங்கவில பிரதேசத்தைச் சேர்ந்த 61 வயது நபரே நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

வயல் வேலையில் ஈடுபட்டுக்கொண்ட இருந்த போதே அவர் காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார் என்று அறிய வருகின்றது. (கே)

## மின்வெட்டு நேரம் மீண்டும் அதிகரிப்பு

கொழும்பு, ஓக. 15

இன்று திங்கட்கிழமையும், நாளை செவ்வாய்க்கிழமையும் ஒரு மணித்தியாலம் 20 நிமிடங்களுக்கு மின்சாரத்தை துண்டிக்க பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

இதன்படி, ஏ, பி, சி, டி, ஈ, எவ், ஜி, எச், ஐ, ஜே, கே, எல், பி, கியூ, ஆர், எஸ், ரி, யூ, வி, டபிள்யூ ஆகிய வலயங்களில் மாலை 5 மணி முதல் இரவு 9 மணி வரையான காலப்பகுதியில் சுழற்சி முறையில் இந்த மின்வெட்டு அமுலாகும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
15.08.2022 திங்கட்கிழமை
பிலவ வருடம், ஆடி 30

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# புதிய கட்சியா அல்லது மறுசீரமைப்பா?

தமிழ்த் தேசிய அரசியல் அதன் தீர்மானகரமான காலத்துக்குள் பிரவேசிக்கின்றது. ராஜபக்ஷக்களுக்கு எதிராக வெளிவந்த, தென்னிலங்கை கிளர்ச்சியால் ஈர்க்கப்பட்டவர்கள், தமிழ்த் தேசிய அரசியலை முன்னெடுப்பதற்கு தற்போதுள்ள எந்தவொரு கட்சியும் பொருத்தமானதல்ல என்று எண்ணுகின்றனர். இன்னொருபுறம் பாரம்பரிய கட்சியான இலங்கை தமிழ் அரசு கட்சியை மறுசீரமைக்க வேண்டும் - அதேவேளை, கூட்டமைப்பை பதிவு செய்து பலப்படுத்த வேண்டுமென்னும் சிந்தனைகளும் வெளித்தெரிகின்றன. இரண்டுமே தவறான எண்ணங்கள் அல்ல. ஆனால், சூழ்நிலையும் வாய்ப்புக்களும் எவ்வாறிருக்கின்றன என்பதைக் கொண்டே, குறித்த விடயங்களை முன்கொண்டு செல்ல முடியும்.

2009இற்கு பின்னர் பல புதிய கட்சிகள், தமிழ்த் தேசியத்தின் பெயரால் உருவாக்கப்பட்டிருக்கின்றன. எனினும், குறித்த கட்சிகளால் மக்கள் மத்தியில் அபிப்பிராயங்களைப் பெற முடியவில்லை. ஒரு பேரெழுச்சியை ஏற்படுத்தக் கூடியதொரு கட்சியை இதுவரையில் உருவாக்க முடியவில்லை. இதற்குக் காரணம் தேர்தல் வெற்றியை இலக்காகக் கொண்டு கட்சிகள் உருவாக்கப்பட்டனவே தவிர, மக்கள் மத்தியில் சிந்தனை மாற்றத்தை ஏற்படுத்தும் இலக்கைக் கொண்டு, எந்தவொரு கட்சியும் இதுவரையில் உருவாகவில்லை.

இந்த நிலையில், ஒரு சக்தி வாய்ந்த கட்சி உருவாகும் வரையில், தற்போது இயங்குநிலையிலுள்ள, ஒப்பீட்டடிப்படையில் மக்கள் ஆதரவுள்ள கட்சியொன்றை, பலப்படுத்தும் உபாயம் தொடர்பில் சிந்திப்பதே சரியானது. அந்த வகையில், பாரம்பரிய தமிழ் அரசுக் கட்சியைக் கட்டமைப்பு சார்ந்து பலப்படுத்துவதற்கு முயற்சிக்கலாம். இதற்கு பழையவர்கள், புதியவர்களுக்கு இடமளிக்க முன்வர வேண்டும். சிலர் அரசியலிலிருந்து ஒதுங்க வேண்டும். வேண்டுமானால் – அவர்கள், மூத்த ஆலோசகர்களாக இருக்கலாம். ஒவ்வொரு மாவட்டங்களிலும், ஆற்றலுள்ளவர்கள் உள்வாங்கப்பட வேண்டும். அரைவாசிக்குக் குறையாத வகையில், இளைஞர், யுவதிகள் உள்வாங்கப்பட வேண்டும்.

தமிழ் அரசுக் கட்சியை மறுசீரமைக்கும் சமவேளையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்து, அதற்குப் புதிய முகத்தை வழங்க வேண்டும். அடுத்த தேர்தலை எதிர்கொள்ளும்போது மக்களுக்கு நம்பிக்கையளிக்கக்கூடிய மாற்றங்களுடன், மக்களை எதிர்கொள்ள வேண்டும். கூட்டமைப்புக்கு எதிர்நிலையிலிருக்கும் தமிழ்த் தேசிய அரசியலைப் பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறும் கட்சிகள் அனைத்துமே, கூட்டமைப்பின் அதிருப்தி வாக்குகளால் வெற்றி பெற்றவர்கள்தான். அவர்களுக்கென்று, பிரத்தியேக மக்கள் ஆதரவுத் தளம் இல்லை.

கூட்டமைப்பின் தவறுகளால்தான், கடந்த பாராளுமன்ற தேர்தலில், அரச ஆதரவுக் கட்சிகளை சேர்ந்தவர்கள் வெற்றிபெறமுடிந்தது. தமிழ் அரசு கட்சியும், கூட்டமைப்பும் சரியான திசையில் பயணம் செய்தால், வடக்கு - கிழக்கில் ஏக தலைமையாக கூட்டமைப்பு மட்டுமே இருக்க முடியும். தமிழ் அரசுக் கட்சியை மறுசீரமைப்பதன் மூலம் பல பிரச்னைகளை சரிசெய்ய முடியும்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியோ அல்லது கூட்டமைப்போ எந்தவொரு தனிநபருக்கோ அல்லது ஒரு குழுவினருக்கோ சொந்தமானதல்ல. கட்சி என்பது மக்களுக்கான ஓர் அரசியல் ஸ்தாபனம். ஆனால், தற்போதுள்ள எந்தவொரு கட்சியும் மக்களுக்கான அரசியல் ஸ்தாபனமாக இல்லை. இதன் காரணமாகவே அரச ஆதரவு கட்சிகளால் இலகுவாக மக்கள் மத்தியில் ஊடுருவ முடிகின்றது. அதனைத் தடுக்க வேண்டுமாயின், பிரதான கட்சியான தமிழ் அரசுக் கட்சியையும், கூட்டமைப்பையும் மறுசீரமைப்பதைத் தவிர வேறு தெரிவுகள் இல்லை. அனைத்துக்கும் தமிழ் அரசு கட்சியின் மறுசீரமைப்பே அத்திபாரமானது. அரசியல் சூழ்நிலைகளும் புதிய சவால்களும், புதிய அரசியல் கட்சிகளுக்கான தேவைகளை நிச்சயம் ஏற்படுத்தும். அதுவரையில் இருப்பதைக் கொண்டு முன்னேற முயற்சிப்பதே சரியானது.

# ‘கண்ணுக்கு கண் என்றால் முழு உலகுமே குருடாகிவிடும்’

**அலசுவது இராஜதந்திரி**

இந்திய சுதந்திரத்தின் பிதாமகர் காந்தி சாத்வீக அணுகுமுறைகள்மீதான தனது நம்பிக்கை பற்றி குறிப்பிடுகையில் “கண்ணுக்கு கண் என்றால் முழு உலகுமே குருடாகிவிடும்“ என்று குறிப்பிட்டிருந்தார்.

இன்று உலகில் மிகச்சிக்கலான பிரச்னைகள் யாவும் ஜனநாயக வழிமுறைகளின் அடிப்படையிலேயே பெரிதும் தீர்த்து வைக்கப்படுகின்றன. இந்த ரீதியில் உலகில் முன்னணி ஜனநாயக நாடுகளில் இயங்கி வருகின்ற புலம்பெயர்ந்த இலங்கை தமிழர் அமைப்புகள் மீதான தடையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் நீக்கியுள்ளமை வரவேற்கத்தக்கதாகும்.

புலம்பெயர்ந்த இலங்கை தமிழ் அமைப்புகள் வடக்கு - கிழக்கு யுத்தம் முனைப்படைந்திருந்த காலப்பகுதியில் தோற்றம் பெற்றிருந்தன.

வடக்கு - கிழக்கில் தோற்றம் பெற்ற ஆயுதப் போராட்டத்தை பயங்கரவாதமாக இலங்கை அரசாங்கம் சித்திரித்திருந்தவேளை அதன் அரசியல் ரீதியான அர்த்தத்தை மேற்குலகம் அறிந்து கொள்ளும் விதத்தில் செயல்படுவதில் புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள் முக்கிய பங்காற்றியிருந்தன.

இந்த நிலையில் யுத்தம் முடிவுற்ற தறுவாயில் இந்த அமைப்புகளையும் ஒருங்கிணைத்து வடக்கு - கிழக்கு பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு இலங்கையில் ஆட்சி அதிகாரங்களில் இருந்தோர் முன்வந்திருப்பார்களேயானால் இன்று இலங்கை பொருளாதார ரீதியான சிக்கல்களிலிருந்து பெரிதும் விடுபட்டிருக்க முடியும். ஆனால், யுத்தத்துக்கு பின்னர் ஆட்சிப் பொறுப்பிலிருந்த மகிந்த மற்றும் கோட்டாபய ராஜபக்ஷவினர் மட்டுமல்ல. வடக்கு - கிழக்கு மக்களின் ஆதரவோடு ஆட்சிக்கு வந்திருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசாங்கம்கூட வடக்கு - கிழக்கு மக்களை ஏமாற்றி விட்டிருந்தது.

யுத்தம் முடிவுக்கு வந்ததும் புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புகளைச் சேர்ந்த சிலர் அன்று மகிந்த ராஜபக்ஷ அரசுக்கு அரசியல் தீர்வை எட்டுவதில் உதவுவதற்கும் முன்வந்திருந்தனர். ஆனால், வெறும் கண்துடைப்பாக மட்டுமே அவர்களின் உதவிகளை மகிந்த ராஜபக்ஷ அரசு நோக்கியதே தவிர உளப்பூர்வமாக எதனையும் மகிந்த அரசு மேற்கொள்ளவில்லை.

இலங்கையில் தாமே துட்டகைமுனு மன்னரின் வாரிசுகள் என்ற விதத்தில் பிரசாரங்களை முன்னெடுத்து யுத்த வெற்றி மூலம் அரசியலில் குளிர்காய ராஜபக்ஷவினர் முன்வந்தனர். இதன் காரணமாக வடக்கு-கிழக்கு மக்களைவிட தென்னிலங்கை மக்களே ஏமாற்றங்களை தழுவினர்.

ஏனெனில், யுத்தம் முடிவுற்றதும் தென்னிலங்கை மக்கள் பெரிதும் எதிர்பார்த்தது ஒரு முழு அளவிலான பொருளாதார அபிவிருத்தியேயாகும். ஆனால், அபிவிருத்தி, சுபீட்சம் என்பவற்றுக்குப்பதிலாக நாடு வங்குரோத்து நிலையை உத்தியோகபூர்வமாகவே அறிவிக்கும் விதத்தில் மிக மோசமான பொருளாதார வீழ்ச்சியை கண்டிருந்தது.

ஒருகட்டத்தில் புலம்பெயர்ந்த இலங்கை தமிழர்களிடம்கூட நிதி உதவிகளைப் பெறுவது பற்றியும் பரிசீலிக்கப்பட்டது. இத்தகைய பின்னணியிலேயே தற்போது புலம்பெயர்ந்த சில தமிழ் அமைப்புகள்மீதான தடையை அரசாங்கம் நீக்கியுள்ளது. தடை நீக்கம் செய்யப்பட்டதாக அறிவிக்கபபட்டுள்ள அமைப்புகளில் அங்கம் வகிக்கின்ற தமிழர்களில் பலர் இலங்கையின் வடக்கு - கிழக்கு யுத்தம் முனைப்படைய ஆரம்பித்த காலப்பகுதியில் இலங்கையிலிருந்தும் வெளியேறியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.


புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள் மீது போடப்பட்டிருந்த தடைகளை நீக்கியுள்ளதன் மூலம் அரசியல் தீர்வை முன்னெடுப்பது தொடர்பாக இதுவரை காலமும் இலங்கையின் வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள் மத்தியிலும் புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியிலும் நிலவிவந்த தென்னிலங்கை ஆட்சியாளர்கள் குறித்த சந்தேகங்களை நீக்க அரச தரப்பினர் முன்வந்துள்ளனரோ எனவும் எண்ணத் தோன்றுகின்றது.

எது எவ்வாறாயினும் புலம்பெயர் தமிழ் அமைப்புகள்மீதான தடை நீக்கம் வரவேற்புக்குரியதே. இந்தத் தடை நீக்கத்தையடுத்து ஏற்படுத்தபடக்கூடிய அரசியல் ரீதியான நகர்வுகள் ஆக்கபூர்வமான பலனைத் தருமானால் அதன்மூலம் முழுநாடுமே நன்மையடையும் என்றே எதிர்பார்க்க முடியும். அத்துடன், சர்வதேச ரீதியாகவும் இலங்கைமீதான தவறான அபிப்பிராயங்கள் நீங்கும் என்றே எதிர்பார்க்க முடியும்.

இலங்கையின் வடக்கு - கிழக்கு பிரச்னைத் தீர்வுக்கு அரசியல் அமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தின் முழுமையான அமுலாக்கமே வழிவகுக்கும் என்பதே வடக்கு - கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகள் அனைத்தினதும் எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

அத்துடன், 13ஆவது திருத்தச் சட்டத்தை அரசியலமைப்பில் சேர்த்துக்கொண்ட மறைந்த ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் பாசறையில் வளர்ந்தவரே இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. எனவே புலம் பெயர் தமிழ் அமைப்புகள் சிலவற்றின்மீதான தடையை நீக்கியதன் மூலம் தனது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தியுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசு, தனது வடக்கு-கிழக்கு பிரச்னை தீர்வு முயற்சி சார்ந்த நகர்வுகளில் தொய்வு நிலைக்கு இடமளிகாதிருந்தால் இலங்கையின் எதிர்காலத்தை நல்ல முறையில் கட்டியெழுப்ப முடியுமென்றே கருதலாம்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஈழநாடு




**மேடம்**
செயல்களில் முன்னேற்றம் காண்பீர்கள். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் இருந்து வந்த தடை விலகும். திடீர் வரவு மகிழ்ச்சியை உண்டாகும்.

**இடபம்**
துணிச்சலாக செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். புதிய பொறுப்புகள் உங்களைத்தேடி வரும். பணிபுரியும் இடத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். தடைபட்டிருந்த செயல்களில் வெற்றி உண்டாகும்.

**மிதுனம்**
உங்கள் முயற்சியில் சிறு தடை ஏற்படும்.கவனமுடன் செயல்படுங்கள். எதிர்பார்த்த தகவல் தாமதமாகும். உங்கள் செயல்களில் இன்று அவசரம் வேண்டாம்.பணி புரியும் இடத்தில் நிதானம் தேவை.

**கடகம்**
அமைதி காப்பது நல்லது.விவாதங்களில் ஈடுபட வேண்டாம். பிறருக்கு அறிவுரை கூற வேண்டாம். உங்களைச் சுற்றி இருப்பவர்களில் நல்லவர் யார் என்பதை தெரிந்து கொள்வீர்கள்.

**சிம்மம்**
சங்கடங்களில் இருந்து விடுபடுவீர்கள். நீங்கள் எதிர்பார்த்த செயலில் லாபம் காண்பீர்கள். பிரச்னைகளை சமாளிப்பீர்கள். உறவினர்களுடன் சுற்றுலா செல்வீர்கள்.உங்களுடைய முயற்சி வெற்றியாகும்.

**கன்னி**
நினைத்ததை சாதிப்பீர்கள். சோர்வு விலகி உற்சாகமாக செயல்படுவீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட சங்கடம் காணாமல் போகும்.உங்கள் செயல்களுக்கு பெரியோரின் ஆதரவு கிடைக்கும்.

**துலாம்**
நினைத்தது ஒன்று நடப்பது ஒன்றாக இருக்கும். எதிர்பார்த்தவற்றில் ஏமாற்றம் உண்டாகும். குடும்பத்தினரின் அதிருப்திக்கு ஆளாவீர்கள்.உங்கள் செயல் இழுபறிக்குப்பின் முடியும்.

**விருட்சிகம்**
பணியில் இருப்பவர்கள் கவனமுடன் செயல்பட வேண்டிய நாள். பொறுமை அவசியம். முயற்சியில் தடை ஏற்படும். பிறரிடம் பேசுவதில் கவனம் தேவை. வேலை பளு அதிகரிக்கும்.

**தனுசு**
தடைபட்டிருந்த பணம் இன்று உங்கள் கைக்கு வரும். அதிர்ஷ்டமான நாள். இன்று நினைத்ததை சாதிப்பீர்கள். உங்களின் தனித்திறமை வெளிப்படும்.மற்றவரின் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**மகரம்**
லாபம் அதிகரிக்கும்.மற்றவர்களின் நெருக்கடியால் சங்கடம் ஏற்படும். பேச்சுக்களில் நிதானம் தேவை. செலவுகள் அதிகரிக்கும். உறவுகளால் சங்கடம் உண்டாகும். மனஅமைதி தேவையான நாள்.

**கும்பம்**
மனதில் குழப்பம் உண்டாகும். திட்டமிட்டு செயல்படுவதால் சங்கடம் குறையும். குழப்பங்களைத் தவிர்பபதால் முயற்சி வெற்றியாகும். சிந்திக்க வேண்டிய நாள். தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**மீனம்**
வெளியூர் பயணங்களால் சங்கடத்தை சந்திப்பீர்கள். செலவுகள் பல வழியில் உண்டாகும்.கோயிலுக்கு குடும்பத்துடன் சென்று வருவீர்கள். வீண்செலவு அதிகரிக்கும். திடீர் செலவு உண்டாகும். குடும்பத்தினருடன் வெளியூர் பயணம் மேற்கொள்வீர்கள்.

# இலங்கையின் துரோகத்தனம் இந்தியாவுக்கு புரியவேண்டும்!

### கச்சதீவை மீளப்பெறுமாறும் பா. ம. க. வலியுறுத்து

சென்னை, ஓக. 15

இலங்கையின் துரோகத்தை இந்தியா புரிந்து கொண்டு அதற்கேற்ற வகையில் வெளிவிவகாரக் கொள்கையை வகுக்க வேண்டும். இந்தியாவின் பாதுகாப்பு கருதி, இலங்கைக்கு இலவசமாக வழங்கப்பட்ட கச்சதீவை திரும்பப் பெறவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் (பா. ம. க.) நிறுவுநர் ச. ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

யுவான் வாங் - 5 கப்பல் இலங்கை வர அனுமதியளித்தமை தொடர்பில் அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

மேலும், "இந்தியாவின் அழுத்தத்தைத் தொடர்ந்து சீன உளவுக் கப்பலுக்கு அனுமதி மறுத்த இலங்கை அரசாங்கம், இப்போது அதன் நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு நாளை சீன உளவுக்கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வர அனுமதித்திருக்கிறது. இலங்கை அரசின் செயல் மிகப்பெரிய நம்பிக்கைத் துரோகம்!

சீனக் கப்பல் இலங்கை துறைமுகத்தில் நிறுத்தப்பட்டால், தமிழகம் உள்ளிட்ட தென்மாநிலங்கள் உளவு பார்க்கப்படும், இந்திய பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படும் என எச்சரித்த பிறகும் சீனக் கப்பலுக்கு இலங்கை அனுமதி அளித்துள்ளது. இலங்கையின் சீனப் பாசத்துக்கு இதுதான் எடுத்துக்காட்டு.

இலங்கையின் வேண்டுகோளை ஏற்று அந்த நாட்டுக்கு டோர்னியர் 228 வகை போர் விமானத்தை இந்தியா இலவசமாக வழங்குகிறது. இப்படியாக இராணுவ உதவி, பொருளாதார உதவி அனைத்தையும் பெற்றுக் கொண்டுதான் இந்தியாவுக்கு இலங்கை துரோகம் செய்கிறது. இதுதான் அதன் குணம்!

இலங்கையின் துரோகத்தை இந்தியா புரிந்து கொண்டு அதற்கேற்ற வகையில் வெளிவிவகாரக் கொள்கையை வகுக்க வேண்டும். இந்தியாவின் பாதுகாப்பு கருதி, இலங்கைக்கு இலவசமாக வழங்கப்பட்ட கச்சதீவை திரும்பப் பெறுவதற்கு மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்", என்றுள்ளது.

# சீனக் கப்பல் இலங்கை செல்வதை இந்தியா தடுத்து நிறுத்த வேண்டும்!

### வைகோ வலியுறுத்து

சென்னை, ஓக. 15

இந்தியாவை உளவு பார்க்க வரும் சீனக் கப்பலைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத்தின் (ம. தி. மு. க.) பொதுச்செயலர் வைகோ வலியுறுத் தியுள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

இலங்கையின் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் சீனாவின் உளவுக் கப்பலை நிறுத்துவதற்கு இலங்கை அரசு அனுமதி வழங்கி உள்ள தகவல் அதிர்ச்சி தருகிறது. சீனாவின் ஆய்வு மற்றும் கண்காணிப்புக் கப்பலான யுவான் வாங் -5, விண்வெளி மற்றும் செயற்கைக் கோள் கண்காணிப்பு தொழில்நுட்பத்தைக் கொண்டு வடிவமைக்கப்பட்டதாகும்.

இந்தக் கப்பலின் மூலம் வான்வழி 750 கிலோ மீற்றர் பரப்பளவுக்கு அதிகமாக உளவு பார்க்க முடியும். அம்பாந்தோட்டை துறைமுகத்தில் சீன உளவுக் கப்பல் நிறுத்தப்பட்டால், தமிழ்நாட்டில் அமைந்துள்ள கல்பாக்கம் மற்றும் கூடங்குளம் போன்ற இந்திய எல்லைக்குள் காணப்படுகிற அணு ஆராய்ச்சி மையங்களை இந்தக் கப்பலின் மூலம் கண்காணிக்க முடியும். மேலும் கேரள, ஆந்திர பிரதேசத்தின் கடலோரப் பகுதிகளில் உள்ள முக்கிய துறைமுகங்கள் உள்ளிட்டவற்றையும் உளவு பார்க்க முடியும்.

இந்துமா கடலில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பாக் நீரிணைக்கு அருகில் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் சீனாவின் உளவு கப்பல் நிறுத்தப்படுவது இந்தியாவின் தென் எல்லையில், நாட்டின் பாதுகாப்புக்கு விடப்பட்டிருக்கின்ற அறைகூவல் ஆகும். சீனக் கப்பல் அங்கு நிறுத்தப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்று செய்திகள் வந்தபோதே இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று கடும் கண்டனங்கள் எழுந்தன. மாநிலங்களவையில், ஓகஸ்ட் 3ஆம் திகதி இந்தப் பிரச்னையை எழுப்பினேன்.

"சீனாவின் உளவுக் கப்பல் விண்வெளி மற்றும் செயற்கைக்கோள் கண்காணிப்புகளை மீறி கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை ஏவும் போர்க் கப்பலாகும். இப்போர்க் கப்பலின் வருகை நமது நாட்டின் பாதுகாப்பு மற்றும் கடலோர பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும். இலங்கையின் பொருளாதார பேரழிவைச் சமாளிக்க இந்தியா 4 மில்லியன் டொலர்களுக்கு மேல் நிதி உதவி செய்துள்ள போதும், இலங்கை அரசு, இந்தியா கவலை கொள்ளும் செயலில் ஈடுபட்டிருக்கிறது.

சீனா உளவு பார்க்காமல் இருக்கவும், நாட்டின் பாதுகாப்பில் அச்சுறுத்தல் இல்லாத வகையில் இராஜதந்திர நடவடிக்கையில் ஈடுபட்டு, இலங்கை அரசை இந்தியா எச்சரிக்க வேண்டும்" என்று நான் வலியுறுத்தினேன்.

ஆனால், தற்போது இலங்கை வெளியுறவுத் அமைச்சகம், சீனாவின் யுவான் வாங்-5 உளவுக் கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் ஓகஸ்ட் 16 முதல் 22 ஆம் திகதி வரை நங்கூரமிட்டு நிறுத்திக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டு இருப்பதாக தெரிவித்திருக்கின்றது. இது கடும் கண்டனத்திற்கு உரியது. இந்திய அரசு, இலங்கை அரசின் இத்தகைய செயல்களை ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது. உடனடியாக இந்தியா தீவிர கவனம் செலுத்தி சீனக் கப்பல் வருகையை தடுத்து நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்துகிறேன் - என்றுள்ளது. (ஐ)

# வடஇந்தியாவின் வெறியாட்டத்தை தமிழகத்தில் புகுத்துகிறது பா.ஜ.க.!

### நாம் தமிழர் கட்சி கண்டனம்

சென்னை, ஓக. 15

"தமிழ்நாடு நிதியமைச்சரை வழிமறித்து காலணி வீசியதன் மூலம் நிதியமைச்சரையும், தமிழ்நாடு அரசையும் மட்டும் பா. ஜ. க. அவமதிக்கவில்லை. நாட்டுக்காக உயிர்நீத்த வீரரின் தியாகத்தையும் அற்ப அரசியலுக்காக அந்தக் கட்சி கொச்சைப் படுத்தி விட்டது" என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில்,

"தமிழ்நாடு நிதியமைச்சர் பழனிவேல் தியாக ராஜனை குறிவைத்து காலணி வீசியுள்ள பா. ஜ. கவினரின் அநாகரிக செயல் பெரும் அதிர்ச்சியளிக்கிறது.

வட மாநிலங்களில் காலங்காலமாக கடைபிடித்துவரும் வன்முறை அரசியல் வெறியாட்டத்தை தமிழ்நாட்டிலும் மெல்ல மெல்ல நுழைக்க முயலும் பா. ஜ. கவினரின் தரம் தாழ்ந்த போக்கு வன்மையான கண்டனத்திற்குரியது - என்றும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# எரிபொருளை சேமித்த நபர் வழக்குகளிலிருந்து விடுதலை!

யாழ்ப்பாணம், ஓக.15

**அனுமதிப் பத்திரமின்றி பெற்றோல் விற்பனை செய்தார், அத்துடன் அனுமதியின்றி மண்ணெண்ணெய், டீசல், பெற்றோல் என்பவற்றை தனது உடைமையாக வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைதான நபரை விடுதலை செய்தது மல்லாகம் நீதிவான் நீதிமன்று.**

சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுபதிகாரியினால் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கில், கைதான நபரிடமிருந்து கைப்பற்றப்பட்ட 1,660 லீற்றர் மண்ணெண்ணெய், 306 லீற்றர் பெற்றோல், 210 லிற்றர் டீசல் என்பன சான்றுப் பொருட்களாக சமர்ப்பிக்கப்பட்டன.

மேலும், இந்த நபர் 750 மில்லிலீற்றர் பெற்றோலை 500 ரூபாய்க்கு பொலிஸாருக்கு விற்பனை செய்தார் என்று தெரிவித்து வழங்கப்பட்ட நாணயத்தாளும் நீதிமன்றில் வழங்கப்பட்டது.

எனினும், குற்றஞ்சாட்டப்பட்ட நபர் தான் பெற்றோல் எதையும் விற்பனை செய்யவில்லை என்றும் விவசாய நடவடிக்கைகளுக்காகவு அந்த எரிபொருட்களை சேகரித்து வைத்திருந்தார் எனவும் குறிப்பிட்டார்.

அத்துடன், விவசாயத் திணைக்களத்தால் தனக்கு வழங்கப்பட்ட அடையாள அட்டை மற்றும் தனது இரண்டு மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கரவண்டி, லான்ட்மாஸ்டர் என்பவற்றின் பதிவுச் சான்றிதழ்களையும் சமர்பித்தார்.

குறித்த நபர் பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட வேண்டிய பாவனையாளராகக் கருதப்பட வேண்டும் என்றும் அந்த அடிப்படையில் எரிபொருட்களை அவர் தன்வசம் வைத்திருப்பது குற்றமாகாது எனவும் அவரின் சார்பில் சட்டத்தரணி திருமதி ஏ.கீர்த்தனாவின் அனுசரணையுடன் ஆஜரான சிரேஸ்ட சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா வாதாடினார்.

மேலும் குற்றச்சாட்டுகளில் உரிய சட்டப்பிரிவுகள் சரியாகக் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இறுதியில், குற்றஞ்சாட்டப்பட்ட நபரை விடுதலை செய்த நீதிவான், அவரிடம் கைப்பற்றப்பட்ட எரிபொருட்களையும் மீளக் கையளிக்குமாறும் உத்தரவிட்டார். (ஐ)

# சாதாரண தர மாணவர்க்கு யாழில் இலவச கருத்தரங்கு

## - இன்று கிளிநொச்சியில் நடைபெறும் -

யாழ்ப்பாணம், ஓக. 15

கல்வி பொதுத்தராதர சாதாரண தர மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு நேற்று யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

வட மாகாணத்திலுள்ள மாணவர்கள் பயன்பெறும் வகையில் சட்டத்தரணி வேலாயுதம் தேவசேனாதிபதியின் கொழும்பு அருள் கல்வி வட்டத்தின் அனுசரணையுடன் இந்த கருத்தரங்கு நடைபெற்றது.

யாழ். மாவட்ட அபிவிருத்தி குழுவின் இணைத்தலைவர் அங்கஜன் இராமநாதன் கலந்து கொண்டு கருத்தரங்கை ஆரம்பித்து வைத்தார்.

இந்த கருத்தரங்கில் பங்குபற்றிய மாணவர்களுக்கு கடந்த கால சாதாரண தர வினாத்தாள்கள் விடைகள் அடங்கிய புத்தகம் இலவசமாக வழங்கப்பட்டது. இதில், யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் மாணவர்கள் பங்கேற்றனர்.

இந்த கருத்தரங்கு தொடர்ச்சியாக வட மாகாணத்தில் இடம்பெற்று வருகின்ற நிலையில் இன்று திங்கட்கிழமை கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்திலும் செவ்வாய்க்கிழமை மாங்குளத்தில் அமைந்துள்ள மாகாண தொழில்நுட்பக் கல்லூரியிலும் புதன்கிழமை முல்லைத்தீவு ஊற்றங்கரை விநாயகர் ஆலய மண்டபத்திலும் வியாழக்கிழமை மன்னார் நகர சபை மண்டபத்திலும் வெள்ளிக்கிழமை வவுனியா நகரசபை மண்டபத்திலும் இடம்பெறவுள்ளது. (ஐ)

# அதிக கட்டணம் வசூலித்த பாதுகாப்பு நிலையம் மூடல்!



யாழ்ப்பாணம், ஓக. 15

நல்லூர் பெருந்திருவிழாவை ஒட்டி அமைக்கப்பட்ட வாகனப் பாதுகாப்பு வாகன நிலையத்தில் அதிக கட்டணம் அறவிடப்பட்ட நிலையத்தை மாநகர சபை பூட்டி பாரமெடுத்துள்ளது.

பருத்தித்துறை வீதியில் அமைக்கப்பட்ட வாகனப் பாதுகாப்பு நிலையமே இவ்வாறு பொறுப்பெடுக்கப்பட்டது.

நல்லூர் பெருந்திருவிழா காலத்தில் அந்த சுற்றாடலில் வாகன பாதுகாப்பு நிலையங்கள் அமைக்கப்படுவது வழமை. யாழ். மாநகர சபையின் அனுமதியுடனேயே இவை அமைக்கப்படுகின்றன. இந்த வாகனப் பாதுகாப்பு நிலையங்களில் சைக்கிளுக்கு 20 ரூபாயும், மோட்டார் சைக்கிளுக்கு 30 ரூபாயும், ஓட்டோ, கார் என்பவற்றுக்கு 50 ரூபாயும், வானுக்கு 100 ரூபாயும் மாநகர சபையால் கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

இந்த நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை மீறி அதிக கட்டணம் வசூலித்த வாகனப் பாதுகாப்பு நிலையமே நேற்று அதிகாரிகளால் மூடப்பட்டது.

இதேவேளை, நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களுக்கு அதிகமான கட்டணங்களை அறவிடுதல், மாநகர சபையின் அங்கீகாரம் பெறாத சிட்டைகளை வழங்குதல் ஆகியவை கண்டறியப்பட்டால் உரிய வாகனப் பாதுகாப்பு நிலையங்கள் உடன் மூடப்படும் என்றும் யாழ். மாநகர சபையினர் எச்சரித்துள்ளனர். (ஐ-3)

# கிளிநொச்சியில் தொடர் திருட்டில் ஈடுபட்டுவந்த நால்வர் கைதாகினர்!



தருமபுரம், ஓக. 15

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கடந்த 2001 ஆம் ஆண்டு தொடக்கம் 2022. 08. 10 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் பல்வேறு திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி எம் சதுரங்கவிற்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து, பல திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய நான்கு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர். அத்துடன், அவர்களால் களவாடப்பட்ட பல பொருட்களும் மீட்கப்பட்டன.

ஒரு மோட்டார் சைக்கிள், 2 சைக்கிள்கள், 1 தொலைக்காட்சி பெட்டி, 1 மடிக்கணினி, 1 தங்கச் சங்கிலி, ஒரு சோடி தோடு, 4கைபேசிகள் என்பவையே பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

கைதான சந்தேகநபர்கள் வட்டக்கச்சி, இராமநாதபுரம் பகுதிகளில் தொடர்ச்சியாக திருட்டுகளில் ஈடுபட்டவர்கள் என்றும் அவர்களை கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# நான்கு கால் கோழிக்குஞ்சை பார்வையிட மக்கள் ஆர்வம்!



யாழ்ப்பாணம், ஓக. 15

அச்சுவேலி - காலானை பகுதியில் உள்ள வீடு ஒன்றில் கோழிக்குஞ்சு ஒன்று நான்கு கால்களுடன் பொரித்துள்ளது.

மகாராஜா கௌரி என்ற குடும்பப் பெண் கோழி வளர்ப்பில் ஈடுபட்டு வருகின்றார். கோழி வளர்ப்பையே அவர் சீவனோபாயமாக கொண்டு வருகின்றார்.

இவரின் வீட்டில் ஆறு கோழிக் குஞ்சுகள் பொரித்த நிலையில், அதில் ஒன்று நான்கு கால்களுடன் காணப்படுகின்றது. ஏனைய கோழிக் குஞ்சுகளைப் போல குறித்த கோழிக் குஞ்சும் சுறுசுறுப்பாக காணப்படுகின்றது.

4 கால் கோழிக் குஞ்சை அந்தப் பிரதேச மக்கள் பார்வையிட்டு வருகின்றனர். (ஐ)

# செஞ்சோலை மாணவர் படுகொலை; யாழ். பல்கலையில் நினைவேந்தல்!

யாழ்ப்பாணம், ஓக. 15

செஞ்சோலை சிறுவர் இல்லம் மீது வான் படையினர் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்ட மாணவர்களின் 16ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்று யாழ். பல்கலைக்கழகத்தில் நினைவுகூரப்பட்டது.

முல்லைத்தீவு வல்லிபுனம் செஞ்சோலை சிறுவர் இல்லத்தின் கடந்த 2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 14ஆம் திகதி இலங்கை வான்படையின் தாக்குதலில் 61 மாணவர்கள் பலியாகினர்.

இவர்களின் 16ஆவது ஆண்டு நினைவேந்தல் யாழ். பல்கலைக்கழகத்தின் பிரதான நினைவுத் தூபியில் காலை 11:30 மணியளவில் இடம்பெற்றது.

மாணவர் ஒன்றியத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நினைவேந்தலில், கொல்லப்பட்ட மாணவர்களின் நினைவுருவ படத்துக்கு ஈகைச் சுடரேற்றப்பட்டதோடு, மலரஞ்சலி செலுத்தப்பட்டு, ஒரு நிமிட அகவணக்கமும் செலுத்தப்பட்டது.

தொடர்ந்து யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர் அழகராசா விஜகுமாரால் படுகொலை தொடர்பான நினைவுரையும் ஆற்றப்பட்டது.

இந்த நிகழ்வில் பல்கலைக் கழக மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள் என பலர் கலந்து கொண்டனர். (ஐ)



# ஜெனிவாவை எதிர்கொள்ள அரசு விசேட பொறிமுறை!

## நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ

**கொழும்பு, ஓக. 15**

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் எதிர்வரும் கூட்டத்தொடரை எதிர்கொள்வதற்கு அரசாங்கம் விசேட பொறி முறையை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது நீதி, சிறைச் சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் 13ஆம் திகதி செப்ரெம்பர் - ஒக்ரோபர் 7ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தொடரில் இலங்கையில் மனித உரிமைகள், பொறுப்புக்கூறல், நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் உள்ளிட்ட விடயங்களில் அடைந்துள்ள முன்னேற்றங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் தனது விடயங்களை ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் வெளிப்படுத்தவுள்ளது.

இந்நிலையில், இதுகுறித்து கருத்து வெளியிட்ட நீதி அமைச்சர் விஜயதாஸராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமைகள், நல்லிணக்கம் மற்றும் மறுசீரமைப்பு தொடர்பில் செயற்படுகின்ற உள்நாட்டு நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள செயல்பாடுகளின் முன்னேற்றங்கள் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பில் வெளிப்படுத்தப்படவுள்ளது.

குறிப்பாக, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பற்றிய அலுவலகம், இழப்பீட்டுப் பணியகம் ஆகியவற்றைக் கிரமமாகச் முன்னெடுத்துச் செல்லல், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க நிறுவனத்தின் ஊடாக, இனங்களுக்கு இடை



யிலான நல்லிணக்கத்தை கட்டியெழுப்பி எதிர்கால ஐக்கியத்தை உருவாக்குவதற்கான செயற்பாடுகள் பற்றி விடயங்கள் குறிப்பிடப்படவுள்ளன.

இதனைவிடவும் சட்டம், ஒழுங்கு மற்றும் அரசியலமைப்பு விடயங்கள் பற்றிய விடயங்கள் தொடர்பில் எடுத்துரைக்கப்படவுள்ளது. குறிப்பாக, அரசியலமைப்பில் பாராளுமன்றத்துக்கு அதிகாரங்களை வழங்கும் வகையிலும் நிறைவேற்று அதிகாரத்தினை குறைக்கும் வகையிலும் முன்மொழியப்பட்டுள்ள 22 ஆவது திருத்தச்சட்டம் சம்பந்தமாகக் குறிப்பிடப்படவுள்ளது.

இதற்காக அண்மையில் கலந்துரையாடலொன்றும் நடத்தப்பட்டுள்ளது. சட்டமா அதிபர் திணைக்களம், வெளிநாட்டலுவல்கள் அமைச்சு, நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சுருபவ் நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒருமைப்பாடு, ஆகிய கட்டமைப்புக்களின் அதிகாரிகள் மட்டத்திலான கலந்துரையாடல் நடைபெற்றுள்ளது.

அடுத்துவரும் காலப்பகுதியில் காணாமலாக்கப்பட்டவர்கள் பற்றிய அலுவலகம் மற்றும் இழப்பீட்டு பணியகம் பற்றியும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் நாட்டின் எதிர்காலத்திற்காக இந்தக் கட்டமைப்புக்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய முறைமை தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

விசேடமாக, ஐ. நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடரை எதிர்கொள்வதற்காக, அதனுடன் தொடர்புடைய அனைத்து நிறுவனங்களும் ஒன்றிணைந்து விசேட பொறிமுறையொன்று தாயரிக்கப்படவுள்ளது.

துரதிர்ஷ்டவசமாக, ஒவ்வொரு இனங்களுக்குள் உள்ள கடும்போக்காளர்கள் இந்த விடயங்களை முன்னகர்த்திச் செல்வதற்கு தடையாக இருக்கின்றார்கள். ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையைப் பயன்படுத்தி தமது அரசியல் இலாபங்களை அடைவதற்கு விளைகின்றார்கள்.

பிரச்னைகள் தீர்க்கப்படுவதை அவ்வாறானவர்கள் விரும்புவதில்லை. அவர்கள் பிரச்னைகளை நீடித்து, தமது அரசியல் இருப்பை தக்கவைத்துக்கொள்ளவே முனைகின்றனர் - என்றார். (ஐ)

---

# எரிபொருள் பதுக்கினாராம் முல்லைத்தீவில் ஒருவர் கைது!

புதுக்குடியிருப்பு, ஓக. 15

எரிபொருளை பதுக்கினார் என்ற குற்றச்சாட்டில் புதுக்குடியிருப்பு பொலிஸார் ஒருவரை கைது செய்துள்ளனர்.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு, மன்னாகண்டல் பகுதியில் விசேட அதிரடிப்படையினருடன் இணைந்து நடத்திய நடவடிக்கையிலேயே இந்த நபர் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

சந்தேக நபர் 1,590 லீற்றர் டீசலை தனது உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டிலேயே அவர் கைது செய்யப்பட்டார். கைதானவர், கனரக இயந்திர ரங்கள், உழவு இயந்திரங்கள், டிப்பர் வாகனங்கள் என்பவை மூலமாக விவசாயம் மற்றும் இதர வேலைகளில் ஈடுபட்டு வருகிறார் என்று கூறப்படுகின்றது.

இதேவேளை குறித்த வழக்கை பதிவு செய்த புதுக்குடியிருப்பு பொலிஸார் கைதான சந்தேக நபரையும், சான்று பொருட்களையும் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் பாரப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

---

# ஜனாதிபதி, எதிர்க்கட்சி தலைவர் தனிப்பட கலந்துரையாடவேண்டும்!

## மனோ கணேசன் எம். பி.

கொழும்பு, ஓக. 15

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் தனிப்பட கலந்துரையாடி, தங்களுக்கு இடையிலான முரண்பாட்டை முதலில் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் வலியுறுத்தியுள்ளார்.

சர்வகட்சி அரசாங்கத்தில் எதிர்க் கட்சி பங்கேற்றால் மட்டுமே அது சர்வகட்சி அரசாங்கமாக அமையும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அத்துடன், சர்வகட்சி அரசாங்கம் சர்வகட்சி வேலைத்திட்டத்தில் பங்கேற்குமாறு ஜனாதிபதியும் பிரதமரும் எமக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

இந்த நாட்டில் பிரதான எதிர்க் கட்சி எதுவென்றே நாம் கேள்வி எழுப்புகின்றோம். மக்கள் விடுதலை முன்னணியா அல்லாதுவிடின் தமிழ்த் தேசிய கூட்டமைப்பா? அல்லது அரசாங்கத்திலிருந்து பிரிந்து வந்து எதிர்க் கட்சி என்று கூறிக் கொண்டு செயல்படும்குழுவினரா?

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியே நாட்டின் பிரதான எதிர்க் கட்சியாகும். ஐக்கிய மக்கள் கூட்டணியாகும். பிரதான எதிர்க் கட்சியினர் நாங்களே. வேறு யாரும் இல்லை. அதனை முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.

எனவே, பிரதான எதிர்க் கட்சியானது அரசாங்கத்துடன் ஏதேனும் ஒரு வகையில் இணைந்து செயல்படாவிட்டால் அது சர்வகட்சி அரசாங்கமாக அமையாது.

எனவே, ஐக்கிய மக்கள் சக்தியும் அரசாங்கமும் ஒன்றிணைந்தால் மட்டுமே அது சர்வ கட்சி அரசாங்கமாக இருக்கும். எனவே நான் இந்த இடத்தில் ஒரு யோசனையை முன்வைக்க விரும்புகின்றேன்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் தனி சந்திப்பில் ஈடுபட வேண்டும். நாட்டுக்காக கதைக்க வேண்டும் -கலந்துரையாட வேண்டும்.

நாட்டுக்காக கதைத்து ஒரு பொது உடன்பாட்டுக்கு வர வேண்டியது அவசியமாகும். இந்த கலந்துரையாடலில் நோக்கம் ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய தேசிய கட்சியும் ஒன்றிணையுமா என்பதல்ல. நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கான கலந்துரையாடலாகவே இது அமைய வேண்டும். - என்றும் கூறினார். (கே)

---

# ஏனைய புலம்பெயர் அமைப்புக்கள், தனிநபர் மீதான தடையையும் நீக்குக!

## தமிழீழ விடுதலை இயக்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 15

புலம்பெயர் அமைப்புகள் மீதான தடையை நீக்கியமையை வரவேற்கும் அதேசமயம், ஏனைய புலம்பெயர் அமைப்புகள் மற்றும் தனிநபர்கள்மீதான தடைகளையும் அரசு நீக்க வேண்டும் என்று தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) கோரிக்கை விடுத்துள்ளது.

அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கு. சுரேந்திரன் இது குறித்து நேற்று விடுத்த அறிக்கையில்,

"எமது தொடர்ச்சியான கோரிக்கைக்கு அமைய ஜனாதிபதி அண்மையில் சில புலம்பெயர் அமைப்புகள்மீதான தடைகளை நீக்கியுள்ளதை வரவேற்கிறோம். இதேநேரம் இன்னும் பல அமைப்புகளும் தனி நபர்களின் பெயர்களும் தடைசெய்யப்பட்ட பட்டியலிலேயே காணப்படகின்றன. இந்தத் தடையை நீக்குமாறு நாம் ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் கோருகிறோம்.

"எமது கோரிக்கையின் பிரதான காரணம் நாடு எதிர்கொண்டிருக்கும் பொருளாதார சிக்கலில் இருந்து மீள்வதற்கு முதலீடு மிக அவசியமாகிறது. புலம்பெயர் உறவுகள் பலர் இங்கு முதலீடு செய்வதில் இருக்கக்கூடிய பிரதான சிக்கல் பாதுகாப்பின்மை ஆகும்.

"தாங்கள் பாரிய முதலீடுகளை இங்கு ஏற்படுத்திய பின்னர் தடைசெய்யப்பட்ட அமைப்புகளுடன் தொடர்பு இருப்பதாகக் காரணம் காட்டி தங்கள் முதலீடுகளை முடக்கவும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யவும் முடியும் என்று அச்சம் கொள்கிறார்கள். முகநூல் இணைப்புக்களை காரணம் காட்டியே பலர் கைது செய்யப்பட்ட சம்பவங்களை சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

"எனவே, முதலீடு செய்யத் தயாராக இருக்கும் புலம்பெயர் உறவுகள் அச்சமின்றி தங்கள் முதலீடுகளை செய்வதற்கு இந்த தடைகளை நீக்குவது அவசியம் என்று உங்களிடம் சுட்டிக் காட்டியுள்ளோம். ஆகவே இதைக் கருத்தில் கொண்டு ஏனைய புலம்பெயர் அமைப்புகளையும் தனிநபர்களின் பெயர்களையும் நீக்குமாறு கோருகிறோம்", - என்றுள்ளது. (ஐ)

---

# மீசாலையில் மாடுகள் களவு; உதவியை நாடும் விவசாயி!

தென்மராட்சி, ஓக. 15

பால் கறவையிலுள்ள இரு மாடுகள் களவு போயுள்ள நிலையில், அவற்றை எங்காவது கண்டவர்கள் தமக்கு அறிவிக்குமாறு விவசாயி ஒருவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மீசாலை வடக்கு வேம்பிராய் பிரதேச வயலில் மேய்ச்சலுக்காக கட்டப்பட்டிருந்த இரண்டு பசு மாடுகள் கடந்த 6ஆம் திகதி சனிக்கிழமை இரவு களவு போயுள்ளன.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை பால் எடுப்பதற்காக உரிமையாளர் சென்று பார்த்த போது கயிறுகள் அறுக்கப்பட்ட நிலையில் மாடுகள் இல்லாதமையைக் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளார்.

களவு போன மாடுகளில் ஒன்று வெள்ளை மாடு, மற்றையது சிவப்பு நிறமுடையவை. இரண்டும் 15 லீற்றர் பால் கறவையுள்ள மாடுகளாகும். களவாடப்பட்ட மாடுகளின் 6 மாதக் கன்றுகள் கத்திய வண்ணமிருக்கின்றன.

பிரதேசம் முழுவதும் தேடி கிடைக்காத நிலையில் அவர் கொடிகாமம் பொலிஸாருக்கு அறிவித்துள்ளார். அன்று மாலையே வந்து பார்வையிட்ட கொடிகாமம் பொலிஸார் முறைப்பாட்டை பதிவு செய்யவில்லை. பின்பு மறுநாள் திங்கட்கிழமை 8ஆம் திகதி மதியமளவில் முறைப்பாட்டை பொலிஸார் எடுத்த போதிலும், மாடுகள் கண்டுபிடிக்கப்படவில்லை.

விவசாயியான உரிமையாளரின் வாழ்வாதாரமாக இருந்த இந்த மாடுகளை காண்பவர்கள் அல்லது தகவல் தெரிந்தவர்கள் உரிமையாளரின் 076 777 1720 என்ற கைபேசி இலக்கத்துக்கு அறிவிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ)

# இலங்கை - இந்திய உறவில் பாதிப்புகள் எவையுமில்லை!

### பிரதமர் தினேஷ் குணவர்த்தன




**கொழும்பு, ஓக. 15**

**“சீனக்கப்பல் அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்குள் பிரவேசிப்ப தால் இலங்கை - இந்திய உறவில் விரிசல் ஏற்படும் என்று வெளியாகும் செய்திகளை அடியோடு மறுக்கின்றோம்.” - இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.**

தென்னிலங்கையின் பிரபல செய்தியாளர் ஒருவரின் கேள் விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது, "இந்தக் கப்பலின் வருகை தொடர்பில் எழுந்த சர்ச்சையான கருத்துக் களைய டுத்து இலங்கை அரசு இது தொடர்பில் தீவிரமாக ஆராய்ந் தது. கப்பல் வருகைக் குச் சில கட்டுப்பாடுகளையும் விதித் தது. அதற்கு இணங்கியே குறித்த கப்பல் அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கு வருகின்றது.

எமக்கு இந்தியாவும் சீனாவும் முக்கியமான நாடுகள். எந்த நாடுகளையும் நாம் பகைக்க முடியாது. இரு நாடுகளும் இலங்கைக்கு உதவிகளை வழங்குகின்றன. எனவே, இரு நாடுகளையும் நாம் அரவணைத் துக்கொண்டே பயணிக்க வேண்டும்" - என்றார். (ஐ)

## எரிபொருள் பெற ஓர் எண்ணின் கீழ் பல வாகனங்களை பதிவு செய்யலாம்!

கொழும்பு, ஓக. 15

அதிகளவான வாகனங்களைக் கொண்ட வணிகங்கள் தமது வணிகப் பதிவு எண்களுடன் (BRN) தேசிய எரிபொருள் அனுமதிப் பத்திரத்துக்கான பதிவைப் பெறமுடியும் என இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப முகவர் நிறுவனம் (ICTA) தெரிவித்துள்ளது.

அரச நிறுவனங்கள் மற்றும் வணிகங்கள் வணிகப்பதிவு எண்களின் கீழ், ஒன்று அல்லது பல கைபேசி எண்கள் மூலம் பதிவு செய்யலாம் என்று அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, http://fuelpass.gov.lk என்ற இணையத்தள முகவரிக்கு பிரவேசித்து, வணிக பதிவு எண் (BRN) வகையின் கீழ், முதலாவது வாகனத்தைப் பதிவு செய்யலாம்.

அதன்பின் பதிவுசெய்யப்பட்ட கைபேசி எண்ணின் சுய விவரத்தில் உள்நுழைந்து, 'Add' என்பதை அழுத்துவதன் மூலம் தமது வணிகத்துக்குரிய மேலும் பல வாகனங்களை சேர்க்க முடியும் என்று இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப முகவர் நிறுவனம் (ICTA) தெரிவித்துள்ளது.

இதேவேளை, சட்டவிரோதமான முறையில் எரிபொருளைப் பெறுவதற்கு, முறையற்ற விதத்தில் அதனைப் பயன்படுத்த வேண்டாம் என்றும் வலுசக்தி அமைச்சுகேட்டுள்ளது. (ஐ)

## இந்தியா, அமெரிக்காவுக்காக கொள்கையை மாற்றமுடியாது

### முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர

கொழும்பு, ஓக. 15

இந்தியா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் தேவைக்கு அமைய எமது வெளிவிவகார கொள் கையை மாற்றியமைத்துக் கொள்ள முடியாது.

யுவான்வாங் -05 கண்காணிப்பு கப்பல் உளவு பார்ப்பதற்காக அம்பாந்தோட்டை துறைமுகத் திற்கு வருகை தருகிறது என இந்தியா குறிப்பிடுவது அடிப் படையற்றது என பாராளுமன்ற உறுப்பினர் ரியல் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

யுவான் வாங் -05 கண் காணிப்பு கப்பல் தொடர்பில் வினவிய போது மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

சீனாவின் யுவான் வாங்-05 கண்காணிப்பு கப்பல் அம் பாந்தோட்டை துறைமுகத் திற்கு வருகை தருவதற்கான அனுமதியை முன்னாள் வெளி விவகாரத்துறை அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் வழங்கினார்.

தற்போதைய வெளிவிவ காரத்துறை அமைச்சர் ஜனாதி பதி சட்டத்தரணி அலி சப்ரி, வழங்கப்பட்ட அனுமதியை இரத்து செய்ய முயற்சிப்பது சர்வதேசத்தின் மத்தியில் இலங் கையின் வெளிவிவகார கொள் கையை மலினப்படுத்தும்.

யுவான் வாங் கப்பல் விவ காரத்தில் இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் அழுத்தம் பிரயோகிப்பதை அவதானிக்க முடிகிறது. இந்த இரு நாடுகளின் தேவைகளுக் காக இலங்கையின் வெளிவிவ கார கொள்கையை மாற்றிய மைத்துக் கொள்ள முடியாது. இலங்கையின் வெளிவிவகார கொள்கை நடுநிலையாக பேணப் பட வேண்டும்.

யுவான் வாங் -05 கண்கா ணிப்பு கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வருகை தரு வதை இந்தியா கடுமையாக எதிர்க்கிறது. இந்தியா மற்றும் அமெரிக்காவின் யுத்த கப்பல் கள் இலங்கைக்கு வருகை தரும் போது சீனா ஒருபோதும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. சீன கப்பல் உளவு பார்ப்பதற்கா கவே அம்பாந்தோட்டை துறை முகத்துக்கு வருகை தருகிறது என இந்தியா குறிப்பிடுவது அடிப்படையற்றதாகும்.

சீனாவின் கப்பல் இந்தி யாவை உளவு பார்ப்பதற்கு அம்பாந்தோட்டை துறைமுகத் திற்கு வருகை தர வேண்டிய தேவை கிடையாது. அம்பாந் தோட்டை துறைமுகத்திற்கு வருகை தராமல் கடற்பரப்பில் இருந்தவாறே இந்தியாவை உளவு பார்க்க முடியும். ஆகவே, இந்த கப்பல் விவகாரத்தில் இந்தியாவின் நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது - என்றார். (ஐ)

## பாதாள உலகக்குழுவின் தலைவன் ஹரக் கட்டா டுபாயில் சிக்கினார்!

கொழும்பு, ஓக 15

இலங்கையால் தேடப்பட்டு வரும் பாதாள உலகக் குற்றவாளிக் கும்பலின் தலைவன் “ஹரக் கட்டா“ என அழைக்கப்படும் நடுன் சிந்தக டுபாயில் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொது பாதுகாப்பு அமைச்சு உறுதிப்படுத்தி யுள்ளது.

டுபாயிலிருந்து போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டு வந்த பிரதான பாதாள உலகக் குழுத் தலைவர்களில் ஒருவ ரான ஹரக் கட்டா என அழைக் கப்படும் நடுன் சிந்தக விக்கிர மரத்ன, பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினரும் சர்வதேச பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட இரகசிய நடவடிக்கையின் போது கடந்த 11ஆம் திகதி டுபாய் விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

அவர் நாட்டை விட்டு துபாய்க்கு தப்பிச் சென்ற போது பயன்படுத்திய போலி வெளிநாட்டு கடவுச்சீட்டு மூலம் கிடைத்த தகவலின் அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். ஹரக் கட்டாவின் முகத்துடன் இறந்த நபரின் தகவலைப் பயன்படுத்தி வெளிநாட்டு கடவுச்சீட்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் சமீபத்தில் நடந்த துப்பாக்கிச் சூடு மற்றும் கொலைகள் ஹரக் கட்டாவின் பின்னணியிலேயே நடந்ததாக பொலிஸார் கூறுகின்றனர். (ஐ)

## காலிமுகத்திடல் போராட்டத்துக்கு மேற்குலக நாடுகள் நிதியளித்தன!

### ஆதாரங்கள் உண்டு என்கிறார் டியூ குணசேகர

கொழும்பு, ஓக. 15

காலிமுகத்திடலில் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் மற் றும் இந்த நாட்டு மக்களின் கோபத்தை மேற்கு உலக நாடு கள் மற்றும் அரச சார்பற்ற நிறு வனங்கள் மறை முகமாக செயல்பட்டன. அந்தப் போராட்டத்துக்கான நிதியை யும் அவர்களே வழங்கினர். அதற்கான சாட்சியங்கள் எங் களிடம் இருக்கின்றன - என்று இலங்கை கம்மியூனிஸ்ட் கட்சி யின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான டியூ குணசேகர தெரிவித்தார்.

ரஷ்யா - உக்ரைன் போர் மற்றும் சீனாவிடம் பெற்றுக் கொண்ட கடன் ஆகியன கார ணமாகவே, எமது நாடு இன்று பாரிய பொருளாதார நெருக் கடிக்குள் வீழ்ந்துள்ளதாக பல ரும் கூறுகின்றனர். உண்மை யில் இது வேடிக்கையாக உள் ளது. எமது நாடு சீனாவை விடவும், ஜப்பானிடம் அதிக கடன் வாங்கியுள்ளது. இவை அனைத்தையும் விடவும் நாம் உலக வங்கியிடம் 52 வீதமான கடனை பெற்றுள்ளோம்.

கொழும்பு பொதுநூலகத் தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன் றில் பங்கேற்று பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

மேலும், எமது நாட்டின் பொருளாதார கொள்கைகள் மாற்றமடைய வேண்டும். இந்த முறைமையை மாற்றாது நாட்டை முன்னேற்றகரமான பாதைக்கு கொண்டுச் செல்வது கடினமாகும். நாட்டில் நிலவும் இந்த பொருளாதார கொள் கையை மாற்றாவிட்டால், மக் களால் புறக்கணிக்கப்படும் நிலைக்கு தள்ளப்படுவீர்கள் என மகிந்த கோட்டாபய ராஜ பக்ஷவிடம் கூறியிருந்தேன்.

ஜே. ஆர். ஜெயவர்த்தன காலத்திலிருந்து காணப்பட்டு வரும் தவறான பொருளாதார கொள்கைகளே தற்போது எமது நாடு பாரிய நெருக் கடிக்கு முகங்கொடுப்பதற்கு காரணம். இந்த பொருளாதார முறைமை மாற்றியமைக்குமாறு நான் கூறியிருந்தேன்.

உண்மையில், இலங்கை பெற் றுள்ள மொத்த கடன் தொகை யில் 10 வீதமான கடனை மாத் திரமே சீனாவிடம் பெற்றுள் ளது. ஜப்பானிடம் 13 வீதமான கடனை பெற்றுள்ளது. 52 வீத மான கடனை உலக வங்கியி டமிருந்தே பெற்றுள்ளது. எமது நாடு கடன் சுமையில் இருந்து மீள்வதற்கு பொரு ளாதார கொள்கை மாற்ற வேண் டியது அவசியம்” - என்றார். (ஐ)

## எரிபொருள் தகவல்களை வெளியிட புதிய செயலி!

கொழும்பு, ஓக. 15

நாட்டில் எரிபொருள் கிடைக்கும் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் தொடர்பான சகல தகவல்களையும் அறிந்து கொள்வதற்கு புதிய செயலியை அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக இலங்கை தகவல் தொழில்நுட்ப முகவர் நிலையம் தெரிவித்துள்ளது.

தகவல் தொழில்நுட்ப முகவர் நிலையத்தின் தலைவர் ஜெயந்த டி சில்வா கருத்து தெரிவிக்கையில்,

நாட்டில் எரிபொருள் கிடைக்கும் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் தொடர்பான தகவல்களை இதன் மூலம் அறிந்து கொள்ள முடியும். விரைவில் இந்த செயலி பொதுமக்களுக்கு அறிமுகப் படுத்தப்படும்.

நாட்டின் எந்தப் பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்கள் தொடர்பான தகவல்களை இந்த செயலியின் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும். மேலும் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு வரவிருக்கும் எரிபொருள் தொடர்பான சகல தகவல் களையும் இதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

அதன்படி, கியூ. ஆர். குறியீடு முறையின் கீழ் குறித்த ஒரு பிரதேசத்தில் வசிக்கும் நபர் ஏனைய பகுதியில் அமைந்துள்ள எந்தவொரு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருந்து எரிபொருளைப் பெறுவதற்கான வாய்ப்பை இந்த செயலியின் ஊடாக அறிமுகப் படுத்தப்படவுள்ளது. அதன் மூலம் நுகர்வோர் எரிபொருளை பெற்றுகொள்ள முடியும்.

மேலும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் சுற்றுலா பயணங்கள் மேற்கொள்ளும் போது அந்த பகுதிகளில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருந்து எரிபொருளை பெற்றுக் கொள்ளும் வகையில் புதிய முறைமை அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (ஐ)

# கனடா தமிழர் தகவல் 30வது ஆண்டு மலர்:

## புகலிடத் தமிழரின் வரலாற்று ஆவணம்

பொன்னையா விவேகானந்தன்

**றொறன்றோ நகரசபை மண்டபத்தில் யூலை 30ம் திகதி இடம்பெற்ற கனடா தமிழர் தகவல் 30வது ஆண்டு மலர் இளமகிழ் சுவடு இதழை வெளியிட்டு வைத்த றொறன்றோ கல்விச்சபை பன்மொழி கல்வித் திட்ட அலுவலர் திரு. பொன்னையா விவேகானந்தன் நிகழ்த்திய உரையின் பிரதான பகுதி இங்கு பிரசுரமாகிறது.**

தமிழர் புலம்பெயர்ந்த நாடொன்றில் அலைவுச் சமூகமாக வாழும் நிலையில், மூன்று தசாப்தங்களைக் கடந்தும் அந்தச் சமூகத்தின் வாழ்வைப் பதிவு செய்த வாறு, மாதந்தவறாது ஒவ்வொரு ஐந்தாம் திகதியும் வெளிவரும் ஒரேயொரு சஞ்சிகை தமிழர் தகவல்.

தமிழர் தகவல் சஞ்சிகை அகவை முப்பத்தொன்றை முடித்து முப்பத்தியிரண்டில் பயணித்துக் கொண்டிருக்கிறது. இத்தொடர்காலத்தில், பல சவால்களை எதிர்கொண்டவாறு தமது இருப்பை வலுப்படுத்திக் கொண்டிருக்கும் தமிழ்ச் சமூகத்தின் வாழ்வோடியைந்த சஞ்சிகையாக இது திகழ்கிறது.

மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் - 1991ம் ஆண்டில் கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட தமிழர் தகவல் சஞ்சிகையின் தோற்றம் தற்செயலானது அல்ல. இது தோன்றிய சூழ்நிலை துயரங்கள் சூழ்ந்ததாகவே இருந்தது.

திரு எஸ். திருச்செல்வம் அவர்கள் திட்டமிட்டு வடிவமைக்கப்பட்டதோர் பயணத்தினூடாக இலங்கையிலிருந்து கனடா வரவில்லை. சடுதியாக அவருக்கு ஏற்பட்ட இழப்புகளும் (மகனும் தந்தையும் இரண்டு வார குறுகிய இடைவெளியில் இறந்தனர்), அவரைச் சுற்றிப் பின்னப்பட்ட மரண வலைகளுமே இலங்கையை விட்டு வெளியேற வேண்டிய தவிர்க்க முடியாத நிர்ப்பந்தத்தை அவருக்கும் அவரது மனைவிக்கும் ஏற்படுத்தியது. அவர்களது பாதுகாப்பைக் கருதிய சர்வதேச மன்னிப்புச் சபையே (Amnesty International) அவர்கள் எந்த நாட்டுக்குச் செல்ல வேண்டும் என்பதையும் முடிவு செய்தது.

சாதாரணமானவர்களால் இந்த இழப்புகளிலிருந்து மீள்வது கடினம். ஓர் ஊடகன் என்ற உணர்வை நாடி - நரம்புகள் என்ற அனைத்திலும் தீராவெறியாக ஏற்றிக்கொண்ட ஒருவரால்தான், மீண்டும் விட்ட இடத்திலிருந்து ஊடகப் பணியைத் தொடர முடியும்.

கனடா வந்திறங்கிய ஓரிரு மாதங்களிலேயே தமிழர் சஞ்சிகையை உருவாக்கும் முயற்சிகளில் ஈடுபட்டார். ஊடகப் பணியைத் தன்னினம் சார்ந்த அறத்தோடு ஆற்றியமைக்காகவே ஒரேயொரு மகனை இழந்த திருச்செல்வம் அவர்கள், அதே பணியைத் தொடர்வதே தமது மகனுக்குச் செய்யும் நன்றி எனக் கருதினார். இச்சஞ்சிகையே ஓரளவுக்கு அவரையும் அவரது துணைவியார் றஞ்சி திரு அவர்களையும் ஆற்றுப்படுத்துவதாயிற்று.

எப்போதுமே தன் துயரப் பின்புலத்தை எங்கும் வெளிப்படுத்துவதை விரும்பாத திருச்செல்வம் அவர்கள், என்றுமே அவை குறித்து தமிழர் தகவல் சஞ்சிகையில் எழுதியதில்லை. பிறரையும் எழுதுவதற்கு அனுமதித்ததில்லை.

கனடாவில் அவ்வப்போது ஓரிரு இலக்கியச் சஞ்சிகைகள் தோன்றிய போதிலும், அவை யாவும் நிலைத்து நிற்கவில்லை. 1991 பெப்ரவரி மாதத்தில் தமிழர் தகவலின் முதலாவது இதழ் மலர்ந்தது. இச்சஞ்சிகையின் முதன்மை இலக்கு கனடா தொடர்பான பயன்மிக்க தகவல்களைத் தமிழர்களுக்கு வழங்குவதே. அதேவேளை, தமிழர் எதிர்கொண்ட, எதிர்கொள்ளும் சிக்கல்களைப் பதிவு செய்து, தீர்வுகளைக் கண்டறியும் வழிகளைத் தேடும் நோக்கிலும் இதன் ஆக்கங்கள் அமைய வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

இந்தச் சஞ்சிகையை உருவாக்கிச் செல்வதில் தமக்குத் துணையாக ஒரு குழுவையும் அமைத்துக் கொண்டார். தொடக்க காலத்தில் எழுதுவதற்குரிய எழுத்தாளர்களையும் அடையாளம் கண்டு, அவர்களையும் இணைத்தபடி பயணத்தைத் தொடர்ந்தார். காலவோட்டத்தில் மெல்ல மெல்ல சில வணிக அனுசரணையாளர்களும் சஞ்சிகையின் இருப்புக்கு பங்காளராயினர்.

இவ்வாறு தன் பயணத்தை ஆரம்பித்த தமிழர் தகவல், பல்துறைகளிலும் வளர்ச்சியடைந்து கொண்டிருந்த அனைத்துலக தமிழ்ச் சமூகத்தோடு அணைந்து தானும் வளர்ந்தது. தமிழருடைய பல்துறை எழுச்சிகளையும் மாதந்தோறும் தவறாமல் பதிவு செய்யும் ஆவணமாக தமிழர் தகவல் வளர்ச்சி கண்டது.




பன்முகப் பண்பாடு கொண்ட புதிய வாழ்தளத்தில் மரபுசார் வாழ்வோடு இரண்டறக் கலந்து வாழ்ந்த ஒரு சமூகம் எத்துணை இடர்களை எதிர்கொள்ள வேண்டுமோ, அத்தனை இடர்களையும் தமிழ்ச்சமூகம் எதிர்கொண்டது. ஒரு புறத்தில் வளர்ச்சி அடைந்து கொண்டிருக்க, மறுபுறத்தில் புதிய வாழ்வோடு போராடித் தவித்துக் கொண்டிருந்தனர் சிலர். இவை பற்றிய புதிய தகவல்களைத தமிழர் தகவல் பதிவு செய்தது மட்டுமன்றி, சிக்கல்களுக்கான தீர்வுகளையும் கட்டுரைகளாக வெளியிட்டது.

இவ்வாறான வாழ்வியல் புலத்தில், வாழ்வானது காலத்துக்குக் காலம் மாற்றங்களால் மாறிச்செல்வது இயல்பு. அந்த மாற்றங்களுக்கேற்ப, இதழ்களும் தம்மை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும். தமிழர் தகவல் இதனை நன்கு உணர்ந்திருந்தது. சஞ்சிகையை தொடர்ந்து வாசிப்போருக்கு இது நன்கு தெரியும்.

புதிய குடிவரவாளர்களுக்கான (முக்கியமாக அகதிகள்) சட்டங்களும் நடைமுறைகளும் காலங்களுக்கேற்ப மாறியவாறு இருக்கும். அவ்வாறான மாற்றங்கள் அனைத்தையும் மாதந்தோறும் தமிழர் தகவல் தவறாமல் சமூகத்துக்கு ஆரம்பத்திலிருந்தே வழங்கி வருகின்றது. இன்றும் பலர் அவ்வாறன தகவல்களை அறிவதற்குத் தமிழர் தகவல் இதழ்களை மாதந்தோறும் தேடிப்பெறுவதை நாம் அறிவோம்.

தமிழர் தகவல் கனடாவில் பல எழுத்தாளர்களை உருவாக்கியிருக்கின்றது. எமக்கு எழுத வராது என்று ஒதுங்கிய பலரை இழுத்து வந்து எழுத வைத்துப் பின்னாளில் நூல்களை வெளியிடும் அளவுக்கு அவர்களை ஆக்கியது தமிழர் தகவல். இதில் கல்வியாளர்கள், சட்டவாளர்கள், மருத்தவர்கள் மற்றும் துறை சார் பிரமுகர்கள் அடங்குவர். அவர்களே பிற்காலத்தில் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் தெரிவித்துள்ளனர். காலஞ்சென்ற அதிபர் பொ. கனகசபாபதி அவர்கள் தமது ஒவ்வொரு நூலிலும் இதனைத் தவறாது குறிப்பிட்டுள்ளார்.

தொண்ணூறுகளின் தொடக்கத்தில் கனடாவில் வெளியான வார, மாதாந்த அச்சு ஊடகங்கள் யாவும் விலை கொடுத்து வாங்குவதற்கு உரியனவாக இருந்தன. பின்னாட்களில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக யாவும் கட்டணமற்ற இலவச இதழ்களாகவே மாறின. ஆனால், தமிழர் தகவல் தொடக்க காலத்திலிருந்தே கட்டணமற்ற இதழாக, 'சமூகத்திலிருந்து சமூகத்துக்கு' (From the community to the community) என்ற மகுட வாக்கியத்துடன் வெளிவருவதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

தமிழர் தகவல் இதழ்களில் தொண்ணூறுகளில் எழுதிய பலர் காலமாகி விட்டனர். ஆனால், அவர்களுடைய எழுத்துகளும் கருத்துகளும் தகவலில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக தமிழர் தகவல் புதிய பரிமாணத்துக்குள் பயணித்துக் கொண்டிருப்பதை ஆழ்ந்து வாசிப்பவர்கள் அறிவார்கள்.

புதிய தலைமுறைகளை 'தமிழ் வாழ்வியல்' என்ற இலக்கில் வார்த்து, வளர்க்க வேண்டிய பாரிய பொறுப்பு அலைவுச் சமூகத்துக்கு உண்டு. இதைப் பெரும் பணியாக ஊடகங்கள் பொறுப்பேற்றுச் செய்ய வேண்டும். கனடாத் தமிழ்ச் சமூகம் சார்ந்த ஆழ்ந்த சிந்தனைத் தளத்தில் வெளியாகின்ற ஊடகங்கள் யாவும், எமது இரண்டாம் தலைமுறையின் வளர்ச்சியிலும் எழுச்சியிலும் ஆழமாகப் பங்குகொள்ள வேண்டும் என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்வர்.

இதை நன்குணர்ந்த தமிழர் தகவல் புதிய தலைமுறையினரை எழுத்தாளர்களாக்கி வருகின்றது. மாதந்தோறும் பல இளையோர் இரு மொழிகளிலும் எழுதி வருகின்றனர். ஆண்டு மலர்களில் இவர்களுக்கென பல பக்கங்கள் ஒதுக்கப்படுகிறது. இந்த எழுத்துகள் வழியே எழும் இளையோர் தம்மை சமூகப் பணிகளுக்கும் ஏற்புடையவர்களாக ஆக்கிக் கொள்ளத் தலைப்பட்டுவிட்டனர். இதுவரை சுமார் நூற்றைம்பதுக்கும் அதிகமான இளையோர் (முக்கியமாக மாணவர்) தமிழர் தகவலிலேயே முதன் முதலாக எழுத ஆரம்பித்தவர்கள் என்பது கவனிப்புக்குரியது. இந்த ஆரோக்கியமான பணியை தமிழர் தகவல் அளவுக்கு மற்றைய ஊடகங்கள் முன்னெடுக்கத் தொடங்கவில்லை.

தமிழர் தகவல் வருடந்தோறும் வெளியிடும் ஆண்டு மலர் மிகவும் போற்றுதற்குரிய ஆவணக் களஞ்சியமாகவும் தகவற் பெட்டகமாகவும் திகழ்ந்து வருகின்றது. ஒவ்வொரு ஆண்டு மலருமே அலைவுச் சமூக வாழ்வியலின் கடந்தகால, நிகழ்கால ஆவணப்பதிவு என்பதில் ஐயமில்லை. ஒரு சமூகத்தை மையப்படுத்தி, அச்சமூகத்துக்குள் வெளியாகும் ஊடகம் அச்சமூக வாழ்வைப் பிரதிபலிப்பதாக அமைந்திருக்க வேண்டும். அச்சமூகத்தின் ஆக்கபூர்வமான எழுச்சிக்கு ஊக்கியாக இருக்க வேண்டும். தமிழர் தகவலின் மாதாந்த இதழ்களும் ஆண்டு மலர்களும் இந்த ஊடக அறத்தை முழுமையாகவே பின்பற்றி அமைந்துள்ளன.

இதுவரை வெளியான அனைத்து ஆண்டு மலர்களும் யாழ். பல்கலைக் கழகம் உட்பட, உலகின் பல நூலகங்களில் பாதுகாத்து வாசிப்புக்கு வைக்கப்பட்டுள்ளன. அலைவுச் சமூகத்தின் வாழ்வை ஆராய முற்படுகின்றவர்களுக்குப் பரிந்துரைக்கப்படும் நூல்களில் இந்த ஆண்டு மலர்களே முதன்மை பெறுகின்றன. இதில் வெளியாகும் கட்டுரைகள் அனைத்தும் 'மறுவாசிப்பு'த் தன்மை கொண்டன என்பதே இதன் ஆவண இயல்பை வெளிப்படுத்தி நிற்கிறது.

அலைவுச் சமூகத்தின் வாழ்வியலைப் பல கோணங்களிலும் ஆய்வுகளாகவும் தகவல்களாகவும் வெளியிட்டு வரும் ஆண்டு மலர்கள் அடுத்த தலைமுறையின் வளர்ச்சியையும் தனித்துவமாக அடையாளப்படுத்தி வருகின்றது.

கொரோனா தொற்றுப் பேரிடர் காரணமாக கடந்த இரண்டு ஆண்டுகளில் குறைந்தது சில வாரங்களேனும் தமிழ் சமூகத்துக்கான ஊடகங்கள் எதுவும் அச்சேறவில்லை. சில ஊடகங்கள் வெளிவருவது நிறுத்தப்பட்டு விட்டது. ஒருசில இணையவழி ஊடகங்களாக மாறிவிட்டன. எனினும், தமிழர் தகவல் தரம் குன்றாமல், அச்சடிக்கப்பட்டு, தடையற்ற விநியோகமும் குறித்த நாளில் மேற்கொள்ளப்பட்டது. எல்லாமே மூடப்பட்டிருந்த நிலையில், எங்கள் வீட்டுவாசலில், வணிக நிறுவனங்களில், பணித்துறை அலுவலகங்களில் தமிழர் தகவல் சஞ்சிகையைப் பார்த்தபோது, ஓர் ஊடகரின் தளர்வறியா உறுதியின் வெளிப்பாடு மீண்டும் ஒருதடவை உறுதிப்படுத்தப்பட்டது.

தமிழர் தகவல் ஆண்டுதோறும் நடத்தும் ஆண்டுமலர் வெளியீட்டு விழா தனிச்சிறப்பு வாய்ந்தது. றொறன்ரோ மாநகரசபையின் அங்கத்தவர் சபா மண்டபத்தில் இந்த விழா தொடர்ச்சியாக 1992ம் ஆண்டிலிருந்து இடம்பெற்று வருகின்றது. இந்த அரங்கில் முதலாவது ஆண்டு மலர் வெளியீட்டிலிருந்து இன்றுவரை தொடர்ந்து நடைபெறும் ஒரு சமூக நிகழ்வாக இடம்பெறுவதால் கனடியத் தமிழர் சமூகம் பெருமிதம் கொள்கிறது. தமிழ் இருக்கை, ஆங்கில இருக்கை என இரண்டு அமர்வுகளாக இவ்விழா இடம்பெறும். ஆரம்பமும் முடிவும் நேரம் தவறாமை என்பது இதன் நேர்த்திக்கும் ஒழுங்குமுறைக்கும் தனித்துவச் சிறப்பை வழங்குகிறது.

இந்த விழாவில் ஒவ்வொரு ஆண்டும் பல்துறை சார்ந்த பிரமுகர்கள் விருது வழங்கி தங்கப் பதக்கம் சூட்டி மதிப்பளிக்கப்படுகிறார்கள். தமிழர் அல்லாதவர்களும், புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழர்களும் இந்த மதிப்பைப் பெற்று வருகின்றனர். வயது வித்தியாசமின்றி மூத்தோர்களும் இளையோர்களும் மாணவர்களும் சமமாக மதிப்பளிக்கப்படும் ஒரு விழாவாக இது அங்கீகாரம் பெற்றுள்ளது.

(09 ஆம் பக்கம் பார்க்க...)

# 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

நீங்காத நினைவுகள் தந்து
நீண்ட தூரம் சென்று ஆண்டுகள்
பத்து கடந்தாலும் ஓயவில்லை
உங்களின் நினைவுகள்
அகலவில்லை அம்மாவின் அன்பு முகம்!
உலகமும் நிஜமில்லை,
உறவுகளும் நிஜமில்லை
என்றுணர்ந்தோம்
உங்களின் இழப்பால்..
இறைவனும் இரக்கமற்றவன்
என்றுணர்ந்தோம் உங்களின்
இறப்பால்! என்ன செய்வது எம்
மனம் ஏங்குகிறது! அழுத
விழிகளுக்கு ஆறுதல்
காட்ட ஒரு முறையாவது வாங்க
அம்மா உங்கள் முகம் காண!
என்றென்றும் உங்கள் அழியா
நினைவுகளுடன் வாழும்
குடும்பத்தினர்!!!!

**ஊர்காவற்றுறை கரம்பொன் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், ஜேர்மனி ஹம் நகரை வதிவிடமாகவும் கொண்டிருந்த இராசம்மா சுப்பையா அவர்களின் 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி.**

மலர்வு
10 - 03 - 1930



உதிர்வு
15 - 08 - 2012

## அமரர் இராசம்மா சுப்பையா

**தகவல்: குடும்பத்தினர்**

# கனடா தமிழர் தகவல் 30 வது ஆண்டு மலர்...

*(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

*இந்த ஆண்டு விழா வரை 271 பிரமுகர்கள் தமிழர் தகவல் விருதுகளைப் பெற்றுள்ளனர் என்பது வரலாற்றுப் பதிவுக்குரியது.*

*தான் தோற்றம் கொள்ளும் சூழலையும் அதன் தேவைகளையும் ஓர் ஊடகம் முழுமையாக உள்வாங்கிக் கொள்ள வேண்டும். அதன் வழியே அந்த சமூகத்தை வழிநடத்திச் செல்லும் பணியில் பங்குகொள்ள வேண்டும். தமிழர் தகவல், தன்னுடைய உள்ளடக்கத்தால் மட்டும் சிறப்புப் பெறவில்லை. ஊடக அறத்தின் வழியே, சமூகம் எவ்வாறு தன்னை நிகழ்த்திச் செல்ல வேண்டும் என்ற அறிவுரையையும் வழங்குகின்றது.*

*தமிழர் தகவலின் முப்பது ஆண்டுகள் தாண்டிய வரலாறு, உலகளாவிய தமிழ் சஞ்சிகைகளுக்கு ஒரு பாடநூலக அமைகின்றது. இதனைத் தோற்றுவித்து இன்றளவும் அதன் இலக்குத் தவறாது வெளியிட்டு வரும் முதன்மை ஆசிரியர் திரு எஸ். திருச்செல்வம் அவர்களும் அவர் சார்ந்த குழுவினரும் பாராட்டுதற்குரியவர்கள்.*

*முப்பதாவது ஆண்டுமலர் வெளியீடு புதியதோர் பரிமாணத்தில் 2021ம் ஆண்டில் நிகழ்த்தப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. அது புதியதோர் உச்சத்தைத் தொட்டிருக்க வேண்டியது. தொற்றுநோய்ப் பேரிடரால் அது பின்தள்ளப்பட்டதால் முப்பதாவது மற்றும் முப்பத்தோராவது ஆண்டுகள் இணைந்த பூர்த்தி மலராக (30+) இளமகிழ் சுவடு என்ற மகுடத்தில் இன்றும் இளமையாக வெளிவருவது புதுமையாக அமைந்து மகிழ்ச்சி தருகிறது.*

*இந்த மலரைக் கையிலே பெற்ற போது. கோவிட் காலத்தில் உண்டு கொழுத்த மனிதர்களைப் போல, இந்த நூலும் கொழுத்தே இருந்தது. பாரமும் பயன் மிக்கதே என்ற உணர்வோடு பக்கங்களைப் புரட்டினேன். விளம்பரங்கள் ஏதுமற்ற 216 பக்கங்கள். அத்தனையும் முத்தான கட்டுரைகள். இந்த இளமகிழ் மலரின் கனதி, காத்திரம் என்பன, அந்த ஓராண்டு மலரின் இழப்பை நிறைவு செய்துவிட்டன என்றே கூற வேண்டும். அத்துணைச் சிறப்பு இந்த மலருக்கு உண்டு.*

*பொதுவாகத் தமிழர் தகவல் இதழ்களில் நான் முதலில் படிப்பது, ஆசிரியர் தலையங்கம்தான். ஆண்டு மலர்களில் அது மேலும் சிறப்பாக இருக்கும். இவ்வாண்டும் சுகமான சுமை என்றமைகின்றது தலைங்கம். கடந்த இரண்டாண்டு கால இடர்களையும் இடைவெளிகளையும் கடந்து வெளிவரும் இந்த மனமகிழ் மலர் ஆக்கும் பணிகளாலும் பக்கங்களாலும் ஆழப் பதிவுகளாலும் கனதியானது எனவும் அதுவே மகிழ்வையும் நிறைவையும் தருகின்றது என்கின்றார் ஆசிரியர்.*

*பொதுவாகவே இவ்வாறான இதழ்களில் பொருளடக்கம் கட்டுரைத் தலைப்புகளுடன் காணப்படுவது வழமை. ஆனால் தமிழர் தகவல் புதுமையான முறையில் படைப்பாளர்களின் படங்களையும் அவர்கள் எழுதிய கட்டுரை இடம்பெறும் பக்கங்களையும் மட்டுமே குறிப்பிடுவதை வழமையாகக் கொண்டுள்ளது. இதில் இவ்வாண்டு மற்றுமொரு புதுமையைச் சேர்த்துள்ளது. இந்த மலரில் கட்டுரை எழுதிய இளையோரின் படங்களை முதலில் இடம்பெறச் செய்து, ஏனைய மூத்த எழுத்தாளர்களின் படங்களைப் பின்னே இடம்பெற்றுள்ளன. அடுத்த தலைமுறையின் வருகைக்கான தோரண வாயிலாக இதைக் கருதலாம்.*

*இதில் 28 இளையோரின் படங்களைக் காணக்கிடைத்த போது, பெரு வியப்பாக இருந்தது. இந்த மலரில் 28 இளையோர் எழுதியிருக்கின்றார்களா? அவசர அவசரமாக அவர்கள் எழுதிய பக்கங்களைப் புரட்டினேன். ஆங்கிலமும் தமிழுமாகப் பலர் பல்வேறு கட்டுரைகளை எழுதியிருந்தார்கள். ஒவ்வொன்றும் பல்வேறு செய்திகளையும் அவர்களுடைய தேடல்களையும் எமக்கு உணர்த்தியது. அவர்களுள் பலர் தொடர்ந்து இந்த இதழில் எழுதத் கூடியவர்கள் என்ற உணர்வையும் எமக்கு ஏற்படுத்தியது.*

*இளம் என்ற சொல்லைப் பயன்படுத்தி ஆண்டுமலர்கள் வெளிவருவது வழமை. இந்த இளம் என்ற சொல்லுக்கு நாம் பொருத்தமானதொரு விளக்கத்தை இவ்வாண்டு வழங்கலாம். இளையோரின் வருகை எமக்குப் பெருமகிழ்வைத் தரும் மலராக இது அமைகின்றது என்ற பொருள் இந்த மலருக்கு மிகப் பொருத்தம் என்றே நான் கருதுகின்றேன். அடுத்த தலைமுறைக்காக எழுதத் தொடங்கியிருக்கும் இளையோருக்கு எமது சிறப்பு வாழ்த்துகள்.*

*அந்தப் படங்களின் வரிசையில் மூத்தோர் படங்களைப் பார்த்தபோது தெரிந்த பலரும் தெரியாத சிலரும் இருந்தார்கள். அவர்களில் சிலர் மேலே குறிப்பிட்ட பெற்றோரின் பிள்ளைகளாக இருந்தனர். மகிழ்வாக இருந்தது. அடுத்த தலைமுறையில் சமூக நோக் கோடு எழுதவல்ல வல்லேரை உருவாக்கும் பெற்றோரும் வாழ்த்துதற்குரியவர்கள்.*

*இந்த மலரை ஐவரைப் பற்றிய நான்கு கட்டுரைகளையும் ஒரு நேர் காணலையும் காணக் கிடைத்தது. பொதுவாகத் தனி மனித ஆளுமைகளைக் பற்றிய கட்டுரைகள் பெரிதும் ஆண்டுமலரில் இடம்பெறுவதில்லை. ஆனால் இம்மலரில் ஐந்து ஆளுமைகள் பற்றிய கட்டுரைகள் வேறுபட்ட வடிவங்களில் இடம்பெற்றிருந்தன.*

*அரங்க ஆற்றுகை ஆளுமையாகச் சிறந்து விளங்கிய திரு குழந்தை சண்முகம், எழுத்துலகில் தனக்கெனவொரு தனிவழியைக் கொண்டு எழுதிவரும் திரு அ. முத்துலிங்கம், பேரா. கனகநாயகம், பட்டிமன்ற உலகில் தனித்துவப் பேச்சாளராகத் திகழும் திரு பட்டிமன்ற ராஜா, இவர்களோடு நடிகர் சிவாஜி கணேசனும் இடம்பெற்றிருந்தார். பலரும் பலவாறாக சிவாஜி கணேசனைப் பற்றி எழுதிவிட்டனர். இதிலென்ன புதிதாக இருக்கப் போகின்றது என எண்ணியவாறு கட்டுரையை வாசித்தபோது வியப்பாக இருந்தது. தமிழீழப் போராட்டத்தின் எழுச்சிக்கு உதவிய சிவாஜியின் திரைப்படங்கள் என்ற நோக்கில் அக்கட்டுரை அருமையாக எழுதப்பட்டிருந்தது.*

*கட்டுரைகளில் பெரும்பாலானவற்றை கனடா வரலாறு வாழ்வியல் தொடர்பான கட்டுரைகள், கனடியத் தமிழர் தொடர்பான கட்டுரைகள், பிற புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழர் வாழ்வு, தாயகம் தொடர்பான கட்டுரைகள், கோவிட் தொடர்பான கட்டுரைகள், அறிவியல் கட்டுரைகள் என்ற பகுப்புகளுக்குள் அடக்கலாம். இப்பகுப்புகளுக்குள் அடங்காத சில கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. பெரும்பாலனவை கனடாவை மையப்படுத்திய கட்டுரைகளாகவே அமைந்திருக்கின்றன. இக்கட்டுரைகளில் ஏறக்குறைய ஐம்பதுக்கு மேற்பட்டவை ஒரு கால கட்டத்துக்குரிய தமிழர் வாழ்வை ஆவணப்படுத்தும் கட்டுரைகளாகவே கருதலாம். புலம்பெயர்ந்தோர் வாழ்வியலில் பல அடுக்குகளையும் கோணங்களையும் இக்கட்டுரைகள் வாயிலாகக் கண்டுகொள்ள முடியும். இந்த நூலில் எட்டு விருதாளர்களின் தகவர்களும் விரிவாகக் கொடுக்கப்பட்டிருந்தன. விருதாளர்களின ஆளுமைகள் உண்மையிலேயே பெரு வியப்பைத் தருவதாக இருக்கின்றன. ஆண்டுதோறும் சிறந்த ஆளுமைகளைக் கண்டறிந்து விருது வழங்குவது என்பது எளிதானதல்ல.*


*இந்த மலரின் நிறைவில் பயணப் பாதை என்ற ஒருபக்கக் கட்டுரை இடம்பெற்றிருக்கின்றது இதை இணை ஆசிரியர் றஞ்சி திரு எழுதியிருக்கின்றார். இது தமிழர் தகவல் என்ற சஞ்சிகையின் இலக்கையும் தடம் மாறாத போக்கையும் வலுவோடும் தெளிவாகவும் சுட்டுகின்றது. இது தரமாதொரு ஊடகத்துக்கான வழிகாட்டலாகவும் அமைந்திருக்கின்றது.*

*நான் வழக்கமாகக் கூறுவதையே மீண்டும் கூறுகின்றேன். புலம்பெயர் தமிழரின் வாழ்வின் வலராற்றை ஆய்வு செய்ய முற்படுவோர் தவிர்த்துவிட்டுச் செல்ல முடியாத ஆவணப்பதிவுகள் தமிழர் சஞ்சிகையின் ஆண்டு மலர்கள். அப்பதிவுகளில் மிகச் சிறந்த பதிவாக இந்த ஆண்டுமலர் அமைந்துள்ளது.*


*தமிழர் தகவலின் இருப்புக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வரும் அனைவருக்கும் இதன் நீண்டகால எழுத்தாளன், வாசகன், பங்காளன் என்ற பெருமையுடன் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.*


# புலமைச் சிகரம் | தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

37.  சம பக்க வடிவமான அறுகோண வடிவம் காணப்படுகின்றது. இதனை அமைக்கப் பொருத்தமான கம்பித் துண்டுகள் எது?

1) 2) 3)





38. காட்டப்பட்டுள்ள திசையில் இருந்து பார்க்கும்போது தோன்றும் விதம் யாது?





1) 2) 3)



39. 3 4 3 = 15 இங்கு ஆகிய குறியீட்டைக் காட்டும் சரியான கணித குறியீட்டினைக் காட்டும் விடை யாது?

1) x , + 2) + , x 3) x , -

40. 



01) **பின்வரும் பந்தியை வாசியுங்கள்.**

காலிக்கோட்டையானது போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட மிகப் பழைமையான கோட்டையாகும். இது பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது. அதன் நுழைவாயில் வழியாக உள்ளே நுழைந்தோம். அங்கே புராதன ஆயுதங்கள், பல்வேறு கடைத்தொகுதிகள் என்பன காணப்பட்டன. அவற்றைப் பார்வையிட்டபடியே கோட்டையின் மேற்பகுதிக்கு வந்தோம். ஆகா! மதிலின் மேல் மோதும் கடலலையின் அழகே அழகுதான்! காலி நகரின் அழகு எம்மைப் பரவசப்படுத்தியது.

**பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

i) பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது எது? ..........

ii) "நவீன" என்பதன் எதிர்க்கருத்து யாது? ..........

iii) அஃறிணை, படர்க்கை, பன்மை வினைச்சொல் ஒன்று எழுதுக.

..........

iv) "எழில்" என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக. ..........

v) எம்மைப் பரவசப்படுத்தியது எது? ..........

vi) இடப்பெயர் ஒன்று எழுதுக. ..........

(6 புள்ளிகள்)

02) அஃறிணை நிகழ்கால பன்மை வினைச்சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழே கோடிடுக.

i) பறந்தன ii) குடிக்கின்றது iii) விழுகின்றன

(1 புள்ளி)

03) **தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.**

சிறப்புடன் / செய்தனர் / பொறுப்புக்களை / அனைவரும் / தமது / மிகவும்

..........

(1 புள்ளி)

04) **பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.**

i) அம்மாவுடன் தம்பி சென்றது. ( )

ii) மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வார்கள். ( )

iii) புறாக்கூட்டம் பறந்தன. ( )

iv) ஒவ்வொரு பறவையும் அழகானவை. ( ) (4 புள்ளிகள்)

05) **பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.**

ஐயா நீங்கள் எங்கே போக வேண்டும் (1 புள்ளி)

## விடைகள்

37. 1 38. 2 39. 1 40. 2

01. 1) காலிக்கோட்டை 2) புராதன
3) காணப்பட்டன 4) அழகு
5) காலி நகரின் அழகு 6) காலிக் கோட்டை, காலி, கோட்டை

02. விழுகின்றன

03. அனைவரும் தமது பொறுப்புக்களை மிகவும் சிறப்புடன் செய்தனர்.

04. 1) × 2) ✓ 3) × 4) ×

05. ஐயா, நீங்கள் எங்கே போக வேண்டும்?

## கல்வி tv CHANNEL-1

**15.08.2022**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

## கல்வி tv CHANNEL - 2

**15.08.2022**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# மட்டக்களப்பு மாநகர அமர்வில் நேற்றுப் பெரும் அமளிதுமளி!

## உறுப்பினர்கள் சிலர் வெளிநடப்பு

மட்டக்களப்பு,ஒக.15

**மட்டக்களப்பு மாநகர சபை அமர்வு நேற்று நடைபெற்றபோது சபையில் பெரும் அமளிதுமளி ஏற்பட்டது. அத்துடன், மாநகர உறுப்பினர்கள் பலர் வெளிநடப்பிலும் ஈடுபட்டனர்.**

மட்டக்களப்பு மாநகர சபையின் 63ஆவது அமர்வு நேற்று முதல்வர் சரவணபவன் தலைமையில் நேற்று இடம்பெற்றது. வழமையான சம்பிரதாயங்களுடன் சபை ஆரம்பித்த நிலையில் கடந்த அமர்வின் கூட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட போது பல வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

இந்த அமர்வின்போது கூட்ட அறிக்கை எழுத்துமூலமாக உறுப்பினர்களுக்கு வழங்கப்படாமல் அவை, இலத்திரனியல் அறிக்கையாக உறுப்பினர்களின் கைபேசிகளுக்கு அனுப்பப்பட்டன. இது சபையில் கடுமையான வாதப் பிரதிவாதங்களை எழுப்பியது. இந்த செயலுக்கு கடுமையான எதிர்ப்புகளை மாநகர சபை உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இது அரச சுற்றுநிருபம் எனவும் கடந்த அமர்வில் இது சமர்ப்பிக்கப்பட்டு தெரிவிக்கப்பட்ட நிலையில் இது தொடர்பில் யாரும் கருத்து தெரிவிக்கவில்லை எனவும் இது தொடர்பில் இன்று எதிர்ப்பு தெரிவிக்கப்படும் நிலையில், அது தொடர்பில் உரிய தரப்புக்கு கொண்டு செல்வதாக மாநகர முதல்வர் தெரிவித்தார்.

எனினும், குறித்த கூட்ட அறிக்கை தங்களுக்கு கிடைக்காதமை ஏற்றுக்கொள்ளமுடியாது என பெரும்பாலான உறுப்பினர்கள் தெரிவித்த நிலையில், அந்த அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு சபை அமர்வு தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது.

இதேபோன்று நிதிக்குழுவின் தீர்மானங்கள் சபைக்குக் கொண்டுவரப்பட்டது. உறுப்பினர்களின் கோரிக்கைகள் புறந்தள்ளப்பட்டு நிதிக்குழு மாநகர சபைக்கு கொண்டுவரப்பட்டதாகக் கூறி மாநகர சபையின் பிரதி முதல்வர் க. சத்தியசீலன் உள்ளிட்ட பல உறுப்பினர்கள் எதிர்ப்புக்களை முன்வைத்தனர்.

நிதிக்குழு கூட்டத்தைப் பிற்போடுமாறு மூன்று உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தபோதிலும் மாநகர முதல்வர் தமது கோரிக்கையைப் புறந்தள்ளி குறித்த நிதிக்குழுவைக் கூட்டி தன்னிச்சையாக செயல்படுகிறார். இதன் காரணமாக குறித்த நிதிக்குழு தீர்மானத்தை தான் உட்பட பெரும்பாலான தீர்மானங்களை புறக்கணிக்கின்றனர் என்று அவர்கள் தெரிவித்தனர்.

தொடர்ந்து வாதப்பிரதிவாதங்கள் நடைபெற்ற நிலையில், மாநகர சபை உறுப்பினர்கள் சிலர் வெளிநடப்பில் ஈடுபட்டனர். எனினும், சிறிது நேரத்தின் பின்னர் மீண்டும் சபை அமர்வில் அவர்கள் கலந்து கொண்டனர். தொடர்ந்தும் சபை குழப்பங்களுக்கு மத்தியிலேயே இடம்பெற்றது. (ஐ)

# பன்குளத்தில் விபத்து மாணவி படுகாயம்!

திருகோணமலை, ஒக. 15

தனியார் கல்வி நிறுவனத்துக்கு சென்று கொண்டிருந்த மாணவியை மோட்டார் சைக்கிள் மோதியதில் அவர் படுகாயமடைந்தார்.

பன்குளம் - திருகோணமலை -ஹொரவபொத்தான பிரதான வீதியில் இந்த விபத்து நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

இதில், மஹதிவுலவெவையை சேர்ந்த மாணவி ஒருவரே படுகாயமடைந்தார்.

இதேவேளை மோட்டார் சைக்கிளில் பயணித்த சாரதியும் இந்த விபத்தில் காயமடைந்துள்ளார் என்றும் மொரவெவை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், மோட்டார் சைக்கிளின் சாரதி மது போதையில் இருந்தாரெனவும், இவர் மஹதிவுல்வெவ பகுதியைச் சேர்ந்த 62 வயதுடையவர் எனவும் தெரியவந்துள்ளது.

காயமடைந்த இருவரும் மஹதிவுல்வெவை பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப் பட்டனர். இதேசமயம் காயமடைந்த மாணவி மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ஐ)



அம்பாறை - வீரமுனை படுகொலையின் 32ஆம் ஆண்டு நினைவேந்தல் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

# 100 நாள் கவனவீர்ப்பு போராட்டம் புல்லுமலையில் முன்னெடுப்பு!

மட்டக்களப்பு, ஒக. 15

“வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்” எனும் 100 நாட்கள் செயல்முனை வின் 13 நாள் கவனவீர்ப்பு போராட்டம் நேற்று முன்தினம் மட்டக்களப்பு புல்லுமலை பிரதேசத்தில் இடம்பெற்றது.

வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு, ஒருங்கிணைப்பாளர் க.லவகுசராசா அழைப்பின் பேரில் புல்லுமலை தேவாலய சந்தியில் 200இற்கும் மேற்பட்ட வர்கள் ஒன்றிணைந்து,




“நாங்கள் சுதந்திரமாக வாழ உரிமைவேண்டும், நாங்கள் நாட்டை துண்டாடவே தனி அரசை கேட்கவில்லை, இலங்கை நாட்டுக்குள் கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வையே கேட்கிறோம், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு தீர்வு வேண்டும். பேச்சு சுதந்திரம் வேண்டும், நாங்கள் எங்கள் உரிமைகளை கேட்கின்றோம்”, என்று எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியவாறு கோஷங்கள் எழுப்பினர். (ஐ)

# ஆழ்கடல் மீன்பிடியாளர்களுக்கு எரிபொருள் வழங்க வேண்டும்!

## அமைச்சர் டக்ளஸூக்கு கடற்றொழிலாளர்கள் கடிதம்

அக்கரைப்பற்று, ஒக. 15

அம்பாறை மாவட்டத்தின் ஆழ்கடல் மீனவர்களுக்கு எரிபொருள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக கல்முனை ஆழ்கடல் மீனவ சங்கத்தின் தலைவர் எம்.ஏ.எம். நசீர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில்,

கடற்றொழிலாளர்கள் தனது தொழிலை மேற்கொள்வதற்கு தங்களுக்குத் தேவையான மண்ணெண்ணெய் மற்றும் டீசல் என்பவற்றை பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த பல மாதங்களாக நிலவி வருகின்ற எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக கடற்றொழில் வெகுவாக பாதிக்கப்பட்டிருப்பதாகவும், இதனால் மீனவர்கள் வாழ்வாதாரம் இழந்து, நிர்க்கதியடைந்திருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எதிர்வரும் வாரம் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஊடாக மண்ணெண்ணெய் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதால் முன்னுரிமை அடிப்படையில் மீனவர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்குவதற்கு மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் மீன்பிடித் திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட உதவிப் பணிப்பாளர் ஊடாக நடவடிக்கை எடுக்க வேண்டும். மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எரிபொருள் விநியோகிக்காமல் மீனவர்களின் தேவைக்கு ஏற்ப எரிபொருளை வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டும் - என்றுள்ளது.

இதேவேளை, எரிபொருள் பற்றாக்குறை காரணமாக ஆழ்கடல் மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு செல்லாததால் என்றும் இல்லாதவாறு அம்பாறை மாவட்டத்தில் மீனுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதுடன், விலையும் அதிகரித்து காணப்படுகின்றது. (ஐ)

# துப்பாக்கியுடன் இளைஞர் கைது!

வாழைச்சேனை, ஒக. 15

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் உள்ளூரில் தயாரிக் கப்பட்ட துப்பாக்கியுடன் 27 வயது இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

மாவட்ட புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவலை யடுத்து ஓமனியாமடு என்ற இடத்தில் வைத்தே அவர் கைது செய்யப்பட்டார்.

காட்டிலிருந்து துப்பாக்கியை குறித்த இளைஞர் வீட்டுக்கு எடுத்துச் சென்றபோதே அவரை பொலிஸார் கைது செய்தனர். இவரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். (ஐ)

# உள்ளூராட்சி பெண் உறுப்பினர்கள் மட்டக்களப்பு மாநகருக்கு பயணம்!

மட்டக்களப்பு, ஒக. 15

தெற்காசியாவில் முதன்முறையாக சிறுவர் நேய நகராக பிரகடனப்படுத்தப்பட்டு சிறுவர்களை முதன்மைப்படுத்தியதாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள மட்டக்களப்பு மாநகர சபையின் செயல்பாடுகளை அறிவதற்காக உள்ளூராட்சி மன்றங்களின் பெண் உறுப்பினர்கள் களப் பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

இலங்கையின் 25 மாவட்டங்களிலும் தெரிவுசெய்யப்பட்ட 100பெண் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் இந்த பயணத்தில் இணைந்துகொண்டனர்.

மட்டக்களப்பு மாநகர சபை மற்றும் செரி நிறுவனம் இணைந்து மட்டக்களப்பு மாநகரத்தை மனித நேய மாநகராகப பிரகடனப்படுத்தின.

அத்துடன், சிறுவர்கள் மகிழ்ச்சியாக தமது செயல்பாடுகளில் ஈடுபடவும் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.

பவ்ரல் நிறுவனத்தின் ஒழுங்கமைப்பில் ஆசிய அபிவிருத்தி நிதியத்தின் நிதியுதவியுடன் இந்த மட்டக்களப்பு மாநகரசபையின் சிறுவர் நேய திட்டம் பற்றிய அறிவூட்டல் நிகழ்ச்சியின் அடிப்படையில் இவர்கள் அழைத்துவரப்பட்டனர்.

இவர்களை மட்டக்களப்பு மாநகர சபையின் முதல்வர் தி.சரவணபவன், செரி நிறுவனத்தின் தேசிய திட்ட இணைப்பாளர் ஜெ.தர்சன் ஆகியோர் வரவேற்று தமது செயற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடல்களை முன்னெடுத்தனர்.

# 50 வருடங்களில் இல்லாத வறட்சியில் பிரித்தானியா!

லண்டன், ஓக. 15

பிரிட்டன் தெற்கு, கிழக்கு, மத்திய பகுதிகளில் வறட்சி நிலை அரசாங்கத்தால் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 50 ஆண்டுகளில் இல்லாத வறட்சியை சமாளிப்பது தொடர்பில் அதிகாரிகளும் வல்லுநர்களும் நடத்திய சந்திப்பைத் தொடர்ந்து வறட்சி நிலையை அறிவித்ததாக பிரிட்டனின் தேசிய வறட்சிக் குழு தெரிவித்தது.

பொதுவாக குளிர் நாடாகக் கருதப்படும் பிரிட்டன் தொடர்ந்து வரலாறு காணாத அனல் காற்றை எதிர்நோக்கி வருகிறது.

டெவோன், கென்ட், கிழக்கு ஆங்கிலியா மற்றும் லிங்கன்ஷயர் உட்பட எட்டு பகுதிகள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பின் மூலம் நீர் நிறுவனங்களால் மேலும் கடுமையான தண்ணீர் சேமிப்பு கட்டுப்பாடுகளை விதிக்க முடியும்.



தோட்டங்களுக்கு நீர் ஊற்றுவது, வாகனங்களைக் கழுவுவதற்குத் தண்ணீரைப் பயன்படுத்துவது போன்ற நடவடிக்கைகளுக்குப் பல நீர் நிறுவனங்கள் தற்காலிகமாக தடை விதித்துள்ளன.

இங்கிலாந்து, வேல்ஸ் ஆகியவற்றின் தெற்குப் பகுதிகள் சில படுமோசமான அனல் காற்றை எதிர் நோக்கும் கூடும் என்று எச்ச ரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. சில வாரங்களுக்கு முன்புதான் பிரிட்டனில் வரலாறு காணாத அளவில் வெப்ப நிலை அதிகமாகப் பதிவானது.

இந்த நிலைக்குப் பருவநிலை மாற்றம் தான் முக்கியமான காரணம் என்று பிரிஸ்டல் பல்கலைக்கழகத்தின் நீரியல் வல்லுநரான கலாநிதி கெம்மா கொக்ஸோன் தெரிவித்துள்ளார். (ஐ)

# அழிவின் பிடியில் அமேசன் காடுகள்

பிரேசிலியா, ஓக. 15

பிரேசில் நாட்டின் அமேசன் மழைக்காடுகளின் பரப்பு கடந்த ஆண்டைக் காட்டிலும் 7 சதவிகிதம் அதிகமாக அழிக்கப்பட்டுள்ளது என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பிரேசில் நாட்டில் உள்ள அமேசன் மழைக்காடுகள் உலகின் முக்கிய இயற்கை சூழ்மண்டலமாக உள்ளது. இங்கு பல்வேறுபட்ட பறவைகள், விலங்கினங்கள், தாவரங்கள் உள்ளன. கடந்த சில ஆண்டுகளாக இந்த மழைக்காடுகளின் பரப்பளவு அழிக்கப்படுவது அதிகரித்து வருகிறது.

இந்நிலையில், சமீபத்தில் வெளியான ஆய்வு தரவுகளின்படி அமேசான் காடுகளின் பரப்பு கடந்த ஆண்டைக் காட்டிலும் நடப்பாண்டு 7.3 சதவிகிதம் அழிக்கப்பட்டுள்ளது.

செயற்கைக் கோள் தரவுகளின்படி 5,474 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் அமேசன் காடுகள் அழிக்கப்பட்டுள்ளன. இது நியூயோர்க் நகரத்தைப் போல் ஏழு மடங்கு அதிகமானது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய வானியல் ஆய்வு மையம் வெளியிட்டுள்ள இந்தத் தரவுகளின்படி ஜூலை மாதத்தில் மட்டும் 1487 சதுர கிலோமீற்றர் அமேசன் காடுகளின் பரப்பளவு அழிவுக்குள்ளாகியுள்ளது.

அமேசன் காடுகளின் அழிவுக்கு அரசு துணை போவதாக குற்றம்சாட்டியுள்ள சூழலியல் ஆர்வலர்கள் காடுகள் அழிவைத் தடுக்க தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் - என்று வலியுறுத் தியுள்ளனர். (ஐ)



# குறைகிறது ரைன் நதி நீர்மட்டம் சிக்கலில் ஜேர்மனி பொருளதாரம்!

பேர்லின், ஓக. 15

நெருக்கடியில் சிக்கியிருக்கும் ஐரோப்பாவுக்கு கடும் வறட்சி மேலும் சவால்களைஏற்படுத்தி உள்ளது. ஜேர்மனி ஊடாகச் செல்கின்ற ரைன் நதியின் தண்ணீர் மட்டம் குறைந்து வருவது அதன் வழியான சரக்குக் கப்பல் பயணங்களைப் பாதித்துள்ளது.

ஜேர்மனியின் பொருளாதாரத்தில் ரைன் நதி கப்பல் போக்குவரத்து முக்கிய இடம் வகிக்கின்றது. வரவிருக்கும் நாட்களில் ரைன் நதியின் நீர் மட்டம் மிகக் குறைந்த புள்ளியை எட்டக்கூடும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சுவிஸின் அல்ப்ஸ் மலையில் தொடங்கி ஜேர்மனிக்குள் சென்று நெதர்லாந்தில் கடலோடு கலக்கின்ற ரைன் நதி ஐரோப்பாவின் மிக நீண்ட நதிகளில் ஒன்றாகும். இந்த நதியின் நீர் மட்டம் 30 சென்ரிமீற்றர் குறைந்திருப்பதாக அளவிடப்பட்டுள்ளது.

கடந்த 2018 கோடையின் போதும் இது போன்று வரட்சியால் நீர் மட்டம் 25 சென்ரி மீற்றர் குறைந்திருந்தது. ஆனால், இந்த முறை வெப்பம் நீடிக்கும் அறிகுறிகள் தென்படுவதால் நீர் மட்டம் வரலாறு காணாத அளவுக்கு வற்றலாம்.

ஜேர்மனியில் நிலக்கரி, பெற்றோலியப் பொருள்கள் என்பன நதி வழியாகவே இழுவைப் படகுகள் மற்றும் கப்பல்கள் மூலம் இடம் நகர்த்தப்படுகின்றன.

ஜேர்மனிக்கான எரிவாயுவை ரஷ்யா குறைத்ததை அடுத்து நாட்டில் நிலக்கரி மின் நிலையங்களை அது முழு வீச்சில் இயக்கத் தொடங்கியுள்ளது. ரைன் நதி ஊடாகவே நிலக்கரி நாட்டின் பல பகுதிகளுக்கும் எடுத்துச் செல்லப்படுகிறது. இந்த நிலைமையில் நதி நீர் குறைந்து வருவதால் பெரிய கப்பல்கள் பயணிக்க முடியாத நிலை உருவாகிவருகிறது . இழுவைப் படகுகள் பொருள்களின் எடையைக் குறைத்து நதி வழி எங்கும் நீர் மட்டத்தைக் கண்காணித்தவாறு செல்ல நேரிட்டுள்ளது.

நதி வழியான பொருள் விநியோகம் மந்தமடைந்தால் அது ஜேர்மனியின் தொழிற்சாலைகளின் செயல்பாடுகளையும் எரிசக்தி உற்பத்தியையும் பெரிதும் பாதிக்கும் என்று எதிர்வு கூறப்படுகிறது. (ஐ)

# இந்தியாவின் பொருளாதாரம் உலகிலேயே அதிவேக வளர்ச்சி

புதுடில்லி, ஓக. 15

உலகிலேயே வேகமாக வளரும் பொருளாதாரமாக இந்தியாவின் பொருளாதாரம் இருக்கும் என்று செய்தி நிறுவனமான பி. ரி. ஐ. தெரிவித்துள்ளது.

பணவீக்கத்தைக் குறைக்க, இந்திய ரிசர்வ் வங்கி தொடர்ந்து கண்காணித்து நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளது.

அபிவிருத்தியின் வளர்ச்சி வேகம் குறைவதற்கான வாய்ப்புகள் இல்லை. இந்த ஆண்டும் அடுத்த ஆண்டும் இந்தியாவில் வேகமாக வளரும் பொருளாதாரம் இருக்கும். பெருகிய வர்த்தகப் பற்றாக்குறையில், நடைமுறை வங்கி கணக்குப் பற்றாக்குறை சீராக முன்னோக்கிச் செல்ல வேண்டும்.

கிரிப்டோ கரன்சியைப் (மறை நூல் நாணயம்) பொறுத்தவரை, எச்சரிக்கை அவசியம். சமீபத்திய கிரிப்டோ பரிவர்த்தனைகளில் இருண்ட பக்கங்கள் அம்பலப்படுத்தப்பட்டுள்ளன. மறுப்புறம் சூதாட்ட விடுதிகள் மீதான வரிவிதிப்பு குறித்த அறிக்கையை நிதி அமைச்சரிடம் சமர்ப்பிக்க வாய்ப்புள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

# அமெரிக்காவுடனான உறவை துண்டிக்கத் தயங்க மாட்டோம்!

## ரஷ்யா இப்படி எச்சரிக்கை

மொஸ்கோ, ஓக. 15

ரஷ்யாவின் சொத்துகளை அமெரிக்கா முடக்கும் பட்சத்தில் அந்த நாட்டுடனான உறவைத் துண்டிக்க தயங்க மாட்டோம் என்று அந்த நாடு எச்சரிக்கை விடுத்துள்ளது.

உக்ரைன் நேட்டோ அமைப்பில் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்த ரஷ்யா அந்த நாட்டின்மீது சிறப்பு இராணுவ நடவடிக்கையை எடுத்துள்ளது. இந்தப் போரில் ரஷ்யாவுக்கு எதிராக உக்ரைனுக்கு ஆயுத உதவிகளை அமெரிக்கா வழங்குகிறது.

இந்தப் போர் காரணமாக ரஷ்யாமீது அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் பல்வேறு பொருளாதார தடைகளை விதித்துள்ளன. இந்த சூழலில் ரஷ்ய வெளியுறவுத் துறை அமைச்சகம் நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையில்,

உக்ரைன் விவகாரத்தில் அமெரிக்காவின் தலையீடு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதனை ஏற்றுக் கொள்ள இயலாது. இதுதொடர்பாக ஏற்கெனவே எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ரஷ்ய - உக்ரைன் பிரச்னையில் எந்தவொரு நாட்டின் தலையீட்டையும் ரஷ்யா விரும்பவில்லை.

ரஷ்யர்களின் சொத்துகள் அமெரிக்காவால் முடக்கப்படுமானால் அது இரு தரப்பு உறவை முற்றிலும் நிரந்தரமாக அழித்துவிடும். மேலும், இதுபோன்ற செயல்கள் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என அமெரிக்காவுக்கு எச்சரிக்கை விடுக்கிறோம் - என்றுள்ளது. (ஐ)

# 35,000 ரூபாய்க்கு தன்னையே வாடகைக்கு விடும் இளைஞர்!

ரோக்கியோ, ஓக. 15



ஜப்பான் தலைநகர் ரோக்கியோவை சேர்ந்தவர் ஷோஜி மோரி மோட்டோ (வயது38). பல்கலைக்கழக படிப்பை நிறைவு செய்த அவர் பல்வேறு தனியார் நிறுவனங்களில் பணியாற்றினார். அந்த நிறுவனங்களில் ஏற்பட்ட கசப்புணர்வுகளால் கடந்த 2018ஆம் ஆண்டில் எவ்வித முதலீடும் இல்லாமல் புதிய தொழிலை தொடங்கினார்.

இதுதொடர்பாக ருவிட்டர் உள்ளிட்ட சமூக வலைதளங்களில். "கடைக்கு செல்வதற்கு ஆள் தேவை, விளையாடுவதற்கு ஆள் தேவை, எளிதான வேலைகளுக்கு ஆள் தேவை என்றால் என்னை வாடகைக்கு எடுத்து கொள்ளலாம். ஆனால், கடினமான வேலைகளை செய்ய மாட்டேன்" என பதிவிட்டார்.

இதைப் பார்த்த பொதுமக்களில் பலர், ஷோஜி மோரிமோட்டாவை வாடகைக்கு முன்பதிவு செய்தனர். முதலில் குறைவான தொகையை வசூலித்த அவர் தற்போது ஒரு நாளைக்கு நம் நாட்டு மதிப்பில் 25 ஆயிரம் ரூபாய் முதல் 35 ஆயிரம் ரூபாய் வரை கட்டணம் வசூலிக்கிறார்.

இதுகுறித்து ஷோஜி கூறியதாவது:

கொரோனா காலத்தில் மட்டும் தனிமையினால் சுமார் 3,000இற்கும் மேற்பட்டோர் தற்கொலை செய்துள்ளனர். மக்களின் தனிமையை போக்க என்னை நானே வாடகைக்கு விடத் தொடங்கினேன். இப்போது ரோக்கியோ முழுவதும் பிரபலமாகிவிட்டேன். 'மிஸ்டர் வாடகை" என்றே மக்கள் அழைக்கின்றனர்.

தனியார் நிறுவனங்களில் பணியாற்றியபோது முதலாளிகள், அதிகாரிகளின் அடக்குமுறைகளில் சிக்கித் தவித்தேன். இப்போது என்னை கேள்வி கேட்பதற்கு யாரும் கிடையாது. இதுவரை பல ஆயிரம் பேர் என்னை வாடகைக்கு அழைத்து சென்றுள்ளனர். இதில் பெரும்பாலானோர் பெண்களாவர்.

வீட்டை சுத்தம் செய்ய வேண்டும், பொருட்களை தூக்க வேண்டும் என்று அழைத்தால் அவர்களோடு செல்ல மாட்டேன். பாலியல் ரீதியாக அழைப்பவர்களையும் நிராகரித்து விடுவேன். வாடிக்கையாளர்களோடு பொழுதைக் கழிக்க மட்டுமே செல்வேன். அவர்களின் மனக்குறைகளை என்னிடம் கூறுவார்கள். இதன்மூலம் அவர்களுக்கு ஆறுதல் கிடைக்கும் - என்றார்.

ஈழநாடு



# வெளிநாட்டு இருபது-20 தொடர்களில் இந்திய வீரர்கள் பங்கேற்க முடியாது!



புதுடில்லி, ஒக. 15

வெளிநாட்டு இருபது - 20 தொடர்களில் இந்திய வீரர்கள் பங்கேற்கக்கூடாது என்று இந்திய கிரிக்கெட் சபை மீண்டும் தெரிவித்துள்ளது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸின் இருபது - 20 லீக்கில் மும்பை இந்தியன்ஸ், டில்லி கப்பிட்டல்ஸ் மற்றும் கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணிகள் முதலீடு செய்துள்ளன. இதேபோன்று தென்னாபிரிக்காவில் அடுத்த ஆண்டு நடக்கவுள்ள இருபது - 20 லீக் தொடரின் 6 அணிகளையும் இந்தியாவை சேர்ந்த ஐ. பி. எல். கிரிக்கெட் அணிகளின் உரிமையாளர்கள் வாங்கியுள்ளனர்.

இந்த வகையில் ஜொகன்னஸ்பேர்கை அடிப்படையாக கொண்டு உதயமாகும் அணியை சென்னை சுப்பர் கிங்ஸ் அணி நிர்வாகம் வாங்கியுள்ளது. இதே போல் கேப்டவுன் அணியை மும்பை இந்தியன்ஸும், டர்பன் அணியை லக்னோ சுப்பர் ஜெயன்ட்ஸும், சென். ஜோர்ஜ் பார்க் அணியை ஹைதராபாத் சன் ரைசர்ஸும், பார்ல் அணி ராஜஸ்தான் ராயல்ஸும், பிரிட்டோரியா அணி டில்லி கப்பிட்டல்ஸும் வாங்கியுள்ளன.

இந்நிலையில் எந்த ஓர் இந்திய வீரரும் அவர்களின் அனைத்து விதமான கிரிக்கெட்டுக்களில் இருந்தும் ஓய்வு பெறுவதற்கு முன்னர் எந்த ஒரு வெளிநாட்டு இருபது - 20 தொடர்களிலும் பங்கேற்கவோ அல்லது வழிகாட்டவோ கூடாது என்ற அறிவிப்பை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை வெளியிட்டுள்ளது.

இதன்படி ஒப்பந்தம் செய்யப்பட்ட அல்லது ஓய்வுபெற்ற மற்றும் ஐ. பி. எல். தொடரில் விளையாடும் எந்த இந்திய வீரரும், தென்னாபிரிக்கா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடைபெறவுள்ள இருபது -20 தொடர்களில் இடம்பெற இந்திய கிரிக்கெட் சபையால் அனுமதிக்கப்படமாட்டார்கள். ஐ. பி. எல்லில் விளையாடும் எவரும் இந்த வெளிநாட்டு தொடர்களில் வழிகாட்டியாகக்கூட இருக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவர்கள் பங்கேற்க விரும்பினால் அவர்கள் இந்திய கிரிக்கெட் சபையுடனான அனைத்து உறவுகள் மற்றும் ஒப்பந்தங்களை முறித்து கொள்ள வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# ராஜஸ்தான் அணி உரிமையாளர் என்னை கன்னத்தில் அறைந்தார்!

## மனம் திறந்தார் ரெய்லர்



வெலிங்டன், ஒக. 15

ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் உரிமையாளர்களில் ஒருவர் தன்னைக் கன்னத்தில் அறைந்தார் என நியூசிலாந்து அணியின் முன்னாள் வீரர் றோஸ் ரெய்லர் உண்மையைப் போட்டுடைத்துள்ளார்.

இதனைஅவர் தனது “ பிளக் அண்ட் வைற் ” என்ற அவரின் சுயசரிதை புத்தகத்தில் தெரிவித்துள்ளார்.

அதில், “ கடந்த 2011 ஆம் ஆண்டு ராஜஸ்தான் றோயல்ஸ் அணி பஞ்சாப் அணிக்கு எதிராக விளையாடியது. அந்தப் போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 195 ஓட்டங்களை துரத்தியது. அந்தப் போட்டியில் நான் ஓட்டம் எடுக்காமல் ஆட்டமிழந்து வெளியேறினேன். அதன்பின் அணியில் உள்ள அனைவரும் ஹோட்டலின் மேல் தளத்தில் உள்ள மதுக்கூடத்தில் இருந்தனர். லிஸ் ஹர்லி ஷேன் வோர்ணுடன் இருந்தார்.

அப்போது ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் உரிமையாளர்களில் ஒருவர் றோஸ் நீங்கள் ஓட்டம் எடுக்காமல் வெளியேறுவதற்காக நாங்கள் உங்களை கோடிக் கணக்கில் ஏலம் எடுக்கவில்லை என்றனர்.

மேலும், எனது கன்னத்தில் மூன்று நான்கு முறை அறைந்தார். அவர் என்னை அறைந்துவிட்டு சிரித்தார். அந்த அறை வலியைக் கொடுப்பதாக இல்லை. ஆனால், அந்த அறைகள் விளையாட்டுக்காக எனவும் உறுதியாக சொல்ல முடியாது. அந்த சூழ்நிலையில் அந்த சம்பவத்தை ஒரு பெரிய பேசுபொருளாக மாற்ற விரும்பவில்லை. ஆனால், இது போன்ற சம்பவங்கள் எல்லாப் போட்டிகளிலும் நடைபெறுகிறது என்பதை கற்பனை செய்து பார்க்கவே கடினமாக இருக்கிறது.” என அந்தப் புத்தகத்தில் கூறியுள்ளார்.

இனவெறி தொடர்பான தாக்குதல்களுக்கும் ஆளானதாக ரெய்லர் தனது சுயசரிதையில் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கனடா ஓப்பன் ரென்னிஸ் சிமோனா அரையிறுதியில்!



ரொறன்ரோ, ஒக. 15

கனடா ஓப்பன் ரென்னிஸ் போட்டி மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதிக்கு ருமேனியாவின் சிமோனா ஹலேப் 5ஆவது முறையாக தகுதி பெற்றுள்ளார்.

ரொறன்ரோ நகரில் கனடா ஓப்பன் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. வெள்ளிக்கிழமை நள்ளிரவு நடைபெற்ற ஒற்றையர் பிரிவு காலிறுதியில் அமெரிக்க இளம் வீராங்கனை கோகோ கௌப்பை 6-4, 7-6 என்ற நேர் செற்களில் வென்ற ஹலேப் எளிதாக அரையிறுதிக்கு தகுதி பெற்றார்.

மற்றொரு காலிறுதியில் அமெரிக்க வீராங்கனை ஜெஸிக்கா பெகுலா 6-3, 6-3 என கஜகஸ்தானின் யுலியாவை வீழ்த்தினார். ஹலேப் - ஜெஸிக்கா அரையிறுதியில் மோதுகின்றனர். மற்றோர் அரையிறுதியில் கரோலினா பிளிஸ்கோவா-பீட்ரிஸ் மயா மோதுகின்றனர்.



# மேற்கிந்தியத் தீவுடனான தொடர் நியூசிலாந்து அணி கைப்பற்றியது

அன்டிகுவா, ஒக. 15

மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான இரண்டாவது இருபது -20 போட்டியில் வென்றதன் மூலம் தொடரை வென்றது நியூசிலாந்து அணி.

மே.இ. தீவுகள் நாடுகளுக்கு சுற்று பயணம் செய்துள்ள நியூசிலாந்து அணி 3 இருபது - 20 போட்டிகள், 3 ஒருநாள் போட்டிகள் விளையாட திட்டமிட்டுள்ளது.

இதில் 2 இருபது - 20 போட்டிகளிலும் நியூசிலாந்து அணி வென்றுள்ளதன் மூலம் தொடரில் 2-0 என முன்னிலையில் உள்ளது. அடுத்த போட்டியில் தோற்றாலும் தொடர் நியூசிலாந்து அணிக்குதான்.

கேன் வில்லியம்சன் தலைமையில் விளையாடிய நியூசிலாந்து அணி 20 ஓவர்களுக்கு 215 ஓட்டங்களை குவித்தது. இதில் அதிகபட்சமாக கொன்வே 42 ஓட்டங்கள், டரில் மிட்செல் 48, கிளென் பிலிப்ஸ் 76 ஓட்டங்களும் எடுத்தனர்.

அடுத்து ஆடிய மே. இ. தீவுகள் அணி நிர்ணயிக்கப்பட்ட ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 125 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. இந்த அணியில் அதிகபட்சமாக ரோமன் பவல் 21 ஓட்டங்களும், ஒபேத் மக்காய் 23 ஓட்டங்களும் எடுத்தனர்.

மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். நியூசிலாந்து அணி சார்பாக சாண்ட்னர், பிரேஸ்வெல் தலா 3 விக்கெட்களை எடுத்தனர். 90 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது நியூசிலாந்து அணி.

கிளென் பிலிப்ஸ் ஆட்டநாயகனாக தேர்வு செய்யப்பட்டார்.

# பங்களாதேஷ் அணியின் தலைவராக சகீப் அல்ஹசன்!



டாக்கா, ஒக. 15

ஆசிய கிண்ணம் மற்றும் ஆசிய கோப்பை மற்றும் இருபது -20 உலகக் கிண்ணத்துக்கான பங்களாதேஷ் அணியின் தலைவராக சகீப் அல் ஹசன் தெரிவாகியுள்ளார்.

நேற்றுமுன்தினம் ஆசிய கிண்ணத்துக்கான வீரர்களை பங்களாதேஷ் கிரிக்கெட் சபை அறிவித்தது. இதில் சகீப் அல் ஹசன் ஆசியக் கிண்ணம் மற்றும் இருபது - 20 உலகக் கிண்ணத்துக்கான பங்களாதேஷ் அணியின் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஆசிய கிண்ணம் எதிர்வரும் 27 முதல் செப்ரெம்பர் 11 வரை ஐக்கிய எமிரேட்ஸில் நடைபெறவிருக்கிறது. ஒக்ரோபரில் இருபது - 20 உலகக்கிண்ணம் தொடங்க இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

அணி விவரம்:

சகீப் அல் ஹசன் (தலைவர்), பிஜோய், முஷ்பிகூர் ரஹீம், அபிவ் ஹூசைன், முசாதீக் ஹூசைன் சைகட், மொசுமதுல்லா, மகதி ஹாசன், சைப்புதீன், ஹாசன் முகமத், முஷ்தபிஹூர் ரஹ்மான், நசும் நிஹமத், ஷபிர் ரஹ்மான், மெகதி ஹாசன், மிர்சா, நூருல் ஹாசன், டஷ்கின் அகமது, எபோட் ஹூசைன், பர்வேஷ் ஹூசைன் எமோன்.

# ஐரோப்பிய உதைபந்தாட்டம் டார்ட்மண்ட் அணி வெற்றி!



பெர்லின், ஒக. 15

ஐரோப்பிய போட்டிகளில் ஒன்றான பண்டஸ் லீகாவில் டார்ட்மண்ட் அணி வெற்றி பெற்றுள்ளது.

பெர்லினில் வெள்ளிக்கிழமை இரவு நடைபெற்ற ஆட்டத்தில் பிரைபர்க் அணியை 3-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது டார்ட்மண்ட்.

1-1 என சமநிலையில் இருந்த நிலையில், கடைசி நேரத்தில் களம் இறக்கப்பட்ட 2 இளம் வீரர்கள் ஜேமி, யூஸூபா அடித்த கோல்களால் வென்றது டார்ட்மண்ட்.

பிரான்ஸ் உதைபந்தாட்ட லீக்கில் லில்லே அணி-நான்டெஸ் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் 1-1 என சமநிலையில் முடிந்தது.

# துப்பாக்கிகளுடன் இருவர் கைதாகினர்!

கொழும்பு, ஓக. 15

காலி, குருநாகல் மாவட்டங்களில் இருவர் வெளிநாட்டு துப்பாக்கிகளுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

காலி மிட்டியாகொடை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசத்தில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வெளிநாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட துப்பாக்கி, மூன்று தோட்டாக்களுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கலுப்பே ஹிக்கடுவ பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயது இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, குருநாகல் வாரியபொலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட திக்வெஹர பிரதேசத்தில் பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது வெளிநாட்டு துப்பாக்கியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

திக்வெஹெர பிரதேசத்தை சேர்ந்த 37 வயது நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். (கே)

# 400 லீற்றர் டீசலை பதுக்கியவர் கைது!

கொழும்பு, ஓக. 15

அநுராதபுரம் கெக்கிராவை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசத்தில் எரிபொருளை பதுக்கி வைத்திருந்த நபரொருவரை பொலிஸார் நேற்று முன்தினம் கைதுசெய்துள்ளனர்.

கொடக்கவெல, நிஹிலுவ பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயது நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே எரிபொருளுடன் குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதன்போது 400 லீற்றர் டீசலையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இது தொடர்பில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கே)

# நாட்டை அழிவிலிருந்து மீட்டெடுக்க சர்வகட்சி வேலைத்திட்டமே தேவை!

## ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு

கொழும்பு, ஓக. 15

**நாடு தற்போது எதிர்கொண்டு இருக்கும் நெருக்கடி நிலைமைகளிலிருந்து மீள்வதற்கு சர்வகட்சி வேலைத்திட்டமே அவசியம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க வலியுறுத்தியுள்ளார்.**

ஊடகங்களை சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். மேலும், நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார, அரசியல், சமூக நெருக்கடிகளை தீர்ப்பதற்கு சர்வகட்சி வேலைத்திட்டம் அவசியம் என்ற நிலைப்பாட்டிலேயே மக்கள் உள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தியும் கடந்த வாரம் ஜனாதிபதியை சந்தித்தது. ஐக்கிய மக்கள் சக்தி மட்டுமல்ல. பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பல கட்சிகள் ஜனாதிபதியுடன் இது தொடர்பில் கலந்துரையாடியுள்ளன.

தற்போதைய சூழ்நிலையில் சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்காது சர்வகட்சி வேலைத்திட்டத்துக்கு செல்லவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. அரசாங்கம் ஒன்றை அமைப்பது என்பது அந்த அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை பெற்றுக்கொண்டு செயல்படுவதாகும். இவ்விடயத்தில் நாங்கள் எவ்வாறு உடன்பட முடியும்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார அரசியல் நெருக்கடியிலிருந்த நாட்டை மீட்டெடுக்கவும் மக்கள் எதிர்கொண்டுள்ள பெரும் பிரச்னைகளிலிருந்து அவர்களை விடுவிக்கவும் சர்வகட்சி வேலைத்திட்டத்துக்கு பங்களிப்பு வழங்குவதற்கு எம்மால் முடியும்.

இது தொடர்பில் நாம் எமது நிலைப்பாடு என்ன என்பதையும் மக்களுக்கு தெரியப்படுத்தியுள்ளோம். எனவே, சர்வகட்சி வேலைத்திட்டத்தை முன்வையுங்கள். அந்த வேலைத்திட்டம் தேசிய வேலைத்திட்டமாக இருக்க வேண்டும். இதனூடாக நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளிலிருந்து மக்களை விடுவிப்பதற்கான தற்காலிக தீர்வுகள் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும்.

உறுதியான வேலைத்திட்டங்கள் முன்வைக்கப்பட வேண்டும். இதேநேரம், சர்வகட்சி வேலைத்திட்டத்துக்கு காலவரையறை அவசியம். எனவே, இந்த விடயத்துக்காக நாங்கள் பல்வேறு யோசனைகளை முன்வைத்துள்ளோம். இந்த யோசனைகளை அடுத்த வாரம் ஜனாதிபதிக்கு அனுப்புவதற்கும் நாம் தீர்மானித்துள்ளோம்" - என்றார். (கே)



# மரண அறிவித்தல்

## நமசிவாயம் ஜெகதீஸ்வரன் (ஈசன்)



**தோற்றம்** 08 - 08 -1964

**மறைவு** 04 - 08 - 2022

யாழ். சங்கானை அரசடி வீதியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Paris ஐ வசிப்பிடமாகவும், தற்போது பிரித்தானியா லண்டனை வதிவிடமாகவும் கொண்ட நமசிவாயம் ஜெகதீஸ்வரன் அவர்கள் 04.08.2022 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற நமசிவாயம், பூமணி (கனடா) தம்பதிகளின் அன்பு மகனும், யாழ். பருத்தித்துறையைச் சேர்ந்த காலஞ்சென்ற சோமசுந்தரம், தங்கேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், நிர்மலா அவர்களின் அன்புக் கணவரும், அனுஷன் அவர்களின் பாசமிகு தந்தையும், அன்னலஷ்சுமி (செல்வி - கனடா), காலஞ்சென்ற மகேஷ்வரன், ஜெயராணி (கனடா), திருமால் (லண்டன்), கெங்காதரன் (சிவா - லண்டன்), ஜெயதர்சினி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோ தரரும், உதயநேசன் (கனடா), யோகாமாலினி (பிரான்ஸ்), சுரேஸ் (கனடா), தயாளினி (லண்டன்), குமுதினி (லண்டன்), பாலேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிவராஜ் - விஜயா (நியூசிலாந்து), மோகன் - திலகா (இலங்கை), அருள் - ரேவதி (இலங்கை), விமலா - சூரி (சுவிஸ்), ராஜன் (இலங்கை), காண்டிபன் (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஆரபி, ஆரிஸ், அஞ்சலன், ஆதிரா, ஆதித்தியா ஆகியோரின் அன்பு மாமனாரும், ராகுல், அஸ்வின் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், அபிநாஸ், அக்ஷயா, ஆத்விக் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், அலெக்சனா, நிரோஷ், ரிதுசன், நிந்துஷா ஆகியோரின் அன்பு மாமாவும், அர்ச்சனா, அபிநயா ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

பார்வைக்கு :
Saturday, 13 Aug 2022 4:00 PM – 8:00 PM
Om Funeral Care Ltd 445 Kenton Rd, Harrow HA3 0XY, UK.

கிரியை :
Tuesday, 16 Aug 2022 11:30 AM – 3:00 PM
Oshwal Ekta Centre 366A Stag Ln, London NW9 9AA,United Kingdom.

தகனம் :
Tuesday, 16 Aug 2022 4:00 PM – 5:00 PM
Hendon Cemetery & Crematorium Holders Hill Rd, London NW7 1NB, UK.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
**குடும்பத்தினர்.**

தொடர்புகளுக்கு :
**நிர்மலா (மனைவி)** – 00447405428872
**உதயநேசன் (மைத்துனர்)** – 0014166481394
**கெங்கன் (சிவா, சகோதரன்)** – 00447852183561
**திருமால் (திரு, சகோதரன்)** – 00447917800774
**பாலேஸ் (மைத்துனர்)** – 00447919371907
**காண்டீபன் (மைத்துனர்)** – 0094770872182

## இலங்கைப்...

கையில் நிகழ்ந்த போரின்போது தமிழகத்தில் தஞ்சம் புகுந்தனர். நான் மண்டபம் அகதிகள் முகாமில் 1986 ஏப்ரல் 21ஆம் திகதி பிறந்தேன் தற்போது எனக்கு திருமணமாகி 2 குழந்தைகள் உள்ளனர். வெளிநாட்டில் எனக்கு வேலை கிடைத்து பெரிய வாய்ப்பு அமைந்துள்ளது. அதற்காக வெளிநாடு செல்வதற்காக கடவுச்சீட்டு வழங்கக் கோரி விண்ணப்பித்தேன். நான் எந்த நாட்டைச் சேர்ந்தவர்? என்பது தொடர்பாக சந்தேகம் எழுந்ததால், நேரில் சென்று எனது விளக்கத்தை சமர்ப்பித்தேன்."

"எனது பெற்றோர் இலங்கையை சேர்ந்தவர்களாக இருந்தாலும், நான் இந்தியாவிலேயே பிறந்தேன் அதற்கான சான்றுகளும் உள்ளன. இந்திய குடியுரிமை சட்டம் 1955-இன் படி 1950 ஜனவரி 26-ஆம் திகதி முதல் 1987 ஜூலை 1-ஆம் திகதி வரை இந்தியாவில் பிறந்த அனைவரும் இந்திய குடிமக்களாகவே கருதப்படுவர். எனவே 1986 இல் தமிழகத்தில் பிறந்த என்னை இந்திய குடிமகளாக கருதி கடவுச் சீட்டு வழங்க உத்தரவிட வேண்டும்" என்று கூறப்பட்டிருந்தது.

நளினியின் இந்த மனு நீதிபதி ஜி. ஆர். சுவாமிநாதன் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது 1955 குடியுரிமைச் சட்டம் பிரிவு 3-இன் படி 1950 ஜனவரி 26 முதல் 1987 ஜூலை 1ஆம் திகதி வரை பிறந்தவர்கள் இந்திய குடிமக்கள்.

இந்த வழக்கை பொறுத்தவரை மனுதாரர் மண்டபம் இலங்கை அகதிகள் முகாமில் 1986ஆம் ஆண்டு பிறந்துள்ளார். தற்போது திருச்சி அகதிகள் முகாமில் உள்ளார். விதிப்படி அவர் இந்திய குடிமகள். ஆகவே அவருக்கு கடவுச் சீட்டு வழங்க வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டார். (ஐ)

## அமைப்புக்கள்...

உலகத் தமிழர் பேரவை, கனடிய தமிழ் காங்கிரஸ் போன்ற அமைப்புகள் மீதும் உலகத் தமிழர் பேரவையின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் போன்றவர்கள்மீதும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய அரசாங்கம் விதித்த தடைகளை ஜனாதிபதி ரணில் அரசாங்கம் நேற்று முன்தினம் நீக்கியதாக அறிவித்தது.

இந்த நிலையில் தன்மீதும், தமது அமைப்பின் மீதுமான தடை நீக்கம் குறித்து சு. சுரேன் குறிப்பிடுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் செப்ரெம்பர் மாத அமர்வில் இலங்கை குறித்து முக்கிய நிகழ்ச்சி நிரல் உள்ளது. இந்த நிலையில், அந்த அமர்வை சமாளிப்பதற்காகவும் இதேபோல சர்வதேச அழுத்தங்களை எதிர்கொள்வதற்கான நகர்வுகளின் அடிப்படையிலுமே புலம்பெயர் அமைப்புகள் மற்றும் புலம்பெயர் தனிநபர்கள் மீதான தடையை இலங்கை அரசாங்கம் நீக்கியுள்ளது.

இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் நல்லிணக்க செயல்பாடுகள் முன்னகர்த்தப்படுவதான தோற்றப்பாட்டை உருவாக்கும் வகையில் இந்த நகர்வு எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ஐரோப்பாவின்...

ரணில் விக்கிரமசிங்கவை கடந்த புதன்கிழமை சந்தித்திருந்தது.

இதன்போது, 'கோட்டா கோ' கிராமத்தின் அமைதியான செயல்பாட்டாளர்கள்மீது தாக்குதல் நடத்தப்பட்டமை, போராட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டமை தொடர்பில் அரசாங்கத்துக்கு தமது அதிருப்தியை தூதுவர்கள் வெளிப்படுத்தியிருந்தனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர்கள், சிவில் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் மற்றும் அனைத்துக்கும் மேலாக கருத்துச் சுதந்திரம் மற்றும் கருத்து வேறுபாடு உரிமை போன்றவற்றைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் குறித்தும் உரையாடினர்.

மேலும், ஜி. எஸ். பி. பிளஸ் வரிசலுகை, சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு, மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான நிலைப்பாடு ஆகிய மூன்று விடயங்கள் குறித்தும் இந்த சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது. இலங்கைக்கு ஜி. எஸ். பி. பிளஸ் வரிச் சலுகை மேலும் நீடிப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியமே முடிவு செய்ய வேண்டும். இதேசமயம், சர்வதேச நாணய நிதியம், மனித உரிமைகள் பேரவை விவகாரத்திலும் ஐரோப்பிய ஒன்றியம் பெரும் செல்வாக்கு செலுத்தும்.

இந்நிலையில், ஐரோப்பிய ஒன்றிய விசேட தூதுவர்களின் எச்சரிக்கை இலங்கைக்கு பெரும் நெருக்கடியாக மாறியுள்ளது. ஏற்கனவே, கடுமையான நிதி நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ள இலங்கை 'ஒன்றின் பின் மற்றொரு நெருக்கடி' என சர்வதேச சமூகத்துடன் மோதும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது - என்றும் தென்னிலங்கை புத்திஜீவிகள் எச்சரித்துள்ளனர். (ஐ -சி)

## இலங்கையில்...

மேலும், கம்பளத்தின் கீழே உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மறக்கடிக்கப்பட்டது. இதேபோன்று கடந்த காலங்களில் இடம்பெற்ற காணாமல் ஆக்கல்கள், கடத்தல்கள், கொலைகள் என அனைத்தும் இன்று கம்பளத்தின் கீழ் மறைக்கப்பட்ட விடயங்களாக மாற்றப்பட்டுவிட்டன - என்றும் அவர் கூறினார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கான பரிசுத்த பாப்பரசர் பிரான்ஸிஸ் சுமார் 4 கோடி ரூபாயை வழங்கும் நிகழ்வு நேற்று கொழும்பு - கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் நடைபெற்றது. இதில் உரையாற்றியபோதே பேராயர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தின் பின்னணியில் அரசியல் சதி இருக்கிறது. ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையிலும் இது தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும். தற்போதைய ஜனாதிபதி இதற்கு சாதகமாக செயல்பட்டால் மாத்திரமே அவரை நான் ஏற்றுக் கொள்வேன்- என்றார். (ஐ)

## செஞ்சோலை...

டிக்கவும், இதையொட்டி உலருணவுப் பொதிகளை விநியோகிக்கவும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாடு செய்திருந்தது.

இந்நிலையில், அங்கு கூடிய அந்தப் பகுதியின் வேறு சிலர் இதுபற்றி தமக்கு அறிவிக்கவில்லை என்று குழப்பத்தில் ஈடுபட்டனர். அத்துடன், புலனாய்வு பிரிவினரும் அங்கு நின்றிருந்தனர்.

இதையடுத்து ஏற்பட்ட குழப்பம் வாய்த்தர்க்கமாக மாறியது. எனினும் சிறிது நேரத்தின் பின்னர் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளிட்ட முன்னணியின் உறுப்பினர்கள் அங்கிருந்து வெளியேறினர்.

"பொலிஸ் மற்றும் இராணுவ புலனாய்வுப் பிரிவினரின் திட்டமிட்ட செயலே செஞ்சோலை மாணவர் படுகொலை நினைவேந்தல் குழப்பத்துக்குக் காரணம்", என்று பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் இதன்போது குறிப்பிட்டிருந்தார். (ஐ)

## ராஜபக்ஷ...

இந்த நிலையில், நாமல் ராஜபக்ஷவுக்கு அமைச்சு பதவி கிடைக்காவிட்டால் பாராளுமன்று கலைக்கப்படும் வரை அவர் எம். பியாகவே இருக்க வேண்டும். அடுத்த பொதுத் தேர்தலில் அவர் வெற்றிபெறாவிடின் அவரின் அரசியல் எதிர்காலம் நிச்சயமற்றதாகிவிடும் என்று ஜனாதிபதியை சந்தித்த பெரமுன கட்சியினர் கவலை தெரிவித்தனர் என்றும் அந்த வட்டாரங்கள் கூறின.

இதேவேளை, தனக்கு அமைச்சுப் பதவியை தருமாறு ஜனாதிபதி ரணிலுக்கு அழுத்தம் கொடுக்க முடியாது என்று நாமல் தெரிவித்துள்ளார் என்றும் கூறப்படுகின்றது. (ஐ)

# செலவினத்தைக் குறைக்கவே அமைச்சுகளை பெறமாட்டோம்!

## இப்படி சொல்கிறார் எதிர்க்கட்சி தலைவர்

கொழும்பு, ஒக. 15

அமைச்சுக்களுக்கான செலவினத்தை குறைத்து அந்த நிதியை மக்கள் நலனுக்கு பயன்படுத்த முடியும் என்பதால் ஐக்கிய மக்கள் சக்தி அமைச்சு பதவிகளை ஏற்காதிருக்கத் தீர்மானித்துள்ளதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் சுமார் 70க்கும் அதிகமானோரை நியமிக்க அரசாங்கம் ஆலோசித்து வருகின்றது. இதற்கு சர்வகட்சி அரசாங்கம் எனவும் பெயரிட்டுள்ளனர்.

இவ்வாறானதொரு சர்வகட்சி அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னர், நாட்டிலுள்ள பொதுமக்களின் அபிலாசைகள் இல்லாதொழிக்கப்படும். ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணி ஆகிய நாம் அரசாங்கத்தின் சிறந்த வேலைத்திட்டங்களுக்கு ஆதரவு வழங்குவோம்.

பிழையான செயற்பாடுகளுக்கு நாம் எதிர்ப்பு வெளியிடுவதுடன் அந்த பிரச்னையை தீர்க்க யோசனைகளை முன் வைப்போம். நாடு வீழ்ந்துள்ள நிலையிலிருந்து நாட்டை கட்டியெழுப்ப நாம் எதிரணியிலிருந்து செயற்படுவோம். இதனால் செலவினம் குறைவடையும் என்பதுடன் அந்த தொகையினை எமது தாய்மார்களுக்கான போசணை வேலைத் திட்டங்களுக்காகவும் பாடசாலை மாணவர்களுக்கான பகலுணவு வேலைத்திட்டத்துக்கு ஒதுக்கிட வேண்டும்.

மாணவர்களின் கல்வி மற்றும் டிஜிட்டல் எண்ணக்கருவின் ஊடாக நாட்டின் 4 பாகங்களிலும், பொருளாதாரத்தை கட்டியெழுப்ப அந்த நிதிகளை ஒதுக்க வேண்டும். அமைச்சரவை அமைச்சுப் பதவியை பெற்றுக்கொள்வதைவிட இதனை செய்வது மேலானது - என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

# நல்லூரில் சங்கிலி அறுத்த பெண் கைது!

யாழ்ப்பாணம், ஒக. 15

நல்லூர் கந்தசுவாமி ஆலய வளாகத்தில் கைக்குழந்தையுடன் நின்ற பெண்ணிடம் தங்கச் சங்கிலியை அபகரித்துச் சென்ற பெண்ணை பொலிஸ் புலனாய்வு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

பெண்ணிடம் பறிக்கப்பட்ட 4 இலட்சம் பெறுமதியான தங்கச் சங்கிலியும் சந்தேக நபரிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிலையில் சந்தேக நபர் நேற்றுக் கைது செய்யப்பட்டார். தாயாரிடமிருந்த கைக்குழந்தை அழுததால் தான் பார்ப்பதாகக் கூறிய மற்றொரு பெண் குழந்தையை வாங்குவதாக பாசாங்கு செய்து தாயார் அணிந்திருந்த சங்கிலியை அறுத்து எடுத்துக்கொண்டு தப்பித்துள்ளார்.

சங்கிலியை பறிகொடுத்த பெண் நல்லூர் உற்சவகால பொலிஸ் பிரிவில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் யாழ்ப்பாணம் மாவட்ட புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது, அராலியைச் சேர்ந்த 39 வயது பெண்ணை பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்தனர். அத்துடன், அபகரிக்கப்பட்ட நகையும் கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் கூறினர்.

சந்தேக நபர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## 30,000 தொன் டீசலுடன் வருகின்றது கப்பல்!

கொழும்பு, ஒக. 15

மற்றுமோர் எரிபொருள் கப்பல் இலங்கையை வந்தடையவுள்ளது.

இந்தக் கப்பலில், சுப்பர் டீசல் உட்பட 30 ஆயிம் மெற்றிக் தொன் டீசல் இந்த நாட்டுக்குள் வரவுள்ளது. இந்தக் கப்பல் இன்று அல்லது நாளை நாட்டை வந்தடையும் என்று பெற்றொலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. (ஐ)

## விகாரைகளுக்கு...

அவரின் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதால் தங்கியுள்ள ஹோட்டலை விட்டு வெளியேற வேண்டாம் என்று அவர் அறிவுத்தப்பட்டுள்ளார். இந்நிலையிலேயே, அவர் பௌத்த விகாரைகளுக்கு சென்று வழிபடுவதற்கு தாய்லாந்து அரசாங்கத்திடம் அனுமதி கேட்டுள்ளார் என்று கூறப்படுகின்றது. (ஐ - சி)

## குடும்பஸ்தர்...

கமெராவில் பதிவான, மரணமான குடும்பஸ்தரை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் பொல்லால் தாக்கும் காட்சி அடங்கிய காணொலியை பெற்றனர். இதைத் தொடர்ந்து நடந்த விசாரணையில் 22, 21 வயதுடைய இரு இளைஞர்களை சந்தேகத்தின் அடிப்படையில் நேற்று கைது செய்தனர்.

கைதான இருவரிடமும் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## மீண்டும்...

இறக்குமதியை மேலும் மட்டுப்படுத்துமாறு இலங்கை மத்திய வங்கி நிதி அமைச்சுக்கு அறிவித்துள்ளது.

நாட்டில் வெளிநாட்டு கையிருப்பின் தாக்கம் எதிர்காலத்தில் தொடர்ந்து மோசமாக இருக்கும் என மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது. எனவே, இந்த இறக்குமதிக் கட்டுப்பாடுகளை உடனடியாகச் செய்ய வேண்டும் என்று மத்திய வங்கி பரிந்துரை செய்துள்ளது..

எரிபொருள், மருந்து மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு டொலரை தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்பதால், அத்தியாவசியமற்ற அனைத்து பொருட்களின் இறக்குமதியும் கண்டிப்பாக கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்று அந்த அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

## கோட்டாபயவை...

தைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு தப்பிச் சென்றிருந்தார்.

முதலில் மாலைதீவுக்கு சென்ற அவர், பின்னர் சிங்கப்பூரில் அடைக்கலம் புகுந்தார். முதலில் 14 நாட்களும், பின்னர் 14 நாட்களுமே கோட்டாபய தங்குவதற்கு சிங்கப்பூர் அரசு அனுமதியளித்தது.

சிங்கப்பூர் தமிழர்கள் அதிகளவில் வாழும் நாடாகும். அங்குள்ள புலம்பெயர் தமிழர்களால் கோட்டாபய ராஜபக்ஷவின் உயிருக்கு அதிக ஆபத்து ஏற்படவாய்ப்புள்ளது என்று அந்த நாட்டின் படையினருக்கு தகவல்கள் கிடைத்தன.

இதனாலேயே, கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வீஸா நீடிப்பு வழங்கப்படவில்லை என்றும் கூறப்படுகின்றது. (ஐ - சி)

ஈழநாடு
Eelanadu

# கொரோனாவுக்கு மேலும் இருவர் பலி!

கொழும்பு, ஓக. 15

நாட்டில் கொரோனா தொற்றால் நேற்று முன்தினம் இருவர் உயிரிழந்தனர்.

இந்த மரணங்கள் நேற்று முன்தினம் இடம்பெற்றன என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் உறுதிப்படுத்தப்பட்டன.

இதன்படி, 60 வயதுக்கு மேற்பட்ட ஆண் ஒருவரும், பெண் ஒருவருமே உயிரிழந்தனர்.

இந்த எண்ணிக்கையுடன், நாட்டில் பதிவான மொத்த கோவிட் இறப்புகளின் எண்ணிக்கை 16 ஆயிரத்து 621ஆக உயர்ந்துள்ளது. (ஐ)

## மரண அறிவித்தல்

தோற்றம் 10 - 07 - 1944



மறைவு 07 - 08 - 2022

### திருமதி அதிஸ்டலெட்சுமி கருணாகரன்

யாழ். அரியாலை மலர்மகள் வீதியைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியா லண்டனை வதிவிடமாகவும் கொண்ட அதிஸ்டலெட்சுமி கருணாகரன் அவர்கள் 07.08.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற மயில்வாகனம், கண்மணி தம்பதிகளின் பாசமிகு புதல்வியும், காலஞ்சென்ற கைலாசபிள்ளை, அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும்,கருணாகரன் அவர்களின் அன்பு மனைவியும்,சுகுணா, ரமேஸ் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான சண்முகலிங்கம் (ஐக்கிய அமெரிக்கா), சீதாலெட்சுமி மற்றும் குமாரராணி, கமலாதேவி, விஜயலெட்சுமி (இலங்கை), மகாலிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், மங்கையர்கரசி, வரதாம்பிகை, ஸ்ரீதரன் (லண்டன்), தர்மகுலசிங்கம், பவானி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

பார்வைக்கு :
Saturday, 13 Aug 2022 5:00 PM – 8:00 PM
Asian Funeral Directors 231-235 Chaplin Rd, Wembley HA0 4UR, United Kingdom.

கிரியை :
Monday, 15 Aug 2022 9:00 AM – 11:00 AM
Home 17, newton Road, wembley HA04EU.

தகனம் :
Monday, 15 Aug 2022 12:00 PM – 1:00 PM
Golders Green Crematorium 62 Hoop Ln, London NW11 7NL, UK.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**கருணாகரன் (கணவர்).**

தொடர்புகளுக்கு :
**கருணாகரன் (கணவர்)**
00447933353402
**சுகுணா (மகள்)**
00447949009163
**ரமேஸ் (மகன்)**
00447958924994

# செஞ்சோலை படுகொலை நினைவுநாள்; வள்ளிபுனத்தில இரு இடங்களில் அஞ்சலி!

முல்லைத்தீவு, ஓக. 15

செஞ்சோலை படுகொலை நாளின் 16ஆம் ஆண்டு நினைவு தினம் வள்ளிபுனத்தில் இரு இடங்களில் இடம் பெற்றன.

கடந்த 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் 14ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்தில் வள்ளிபுனம் பகுதியில் உள்ள செஞ்சோலை சிறுவர் இல்ல வளாகம் மீது விமானப் படையின் தாக்குதலில் 61 பேர் கொல்லப்பட்டனர். 129இற்கும் அதிகமான மாணவிகள் அவயவங்களை இழந்தனர்.

16ஆம் ஆண்டு நினைவு தினமான நேற்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் வள்ளிபுனம் பகுதியில் நினைவு வளைவு அமைந்துள்ள இடத்துக்கு அருகில் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது உயிரிழந்தோரின் உருவப்படங்களுக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டு தீபம் ஏற்றப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டது.



இதில் படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்கள், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

வள்ளிபுனம் பகுதியில் செஞ்சோலை வளாகம் அமைந்திருந்த குண்டு தாக்குதல் நடைபெற்ற இடத்தில் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள் சிலரும் சமூக செயல்பாட்டாளர்கள் சிலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். (ஐ)

# தடைநீக்கம் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு தெளிவுபடுத்த வேண்டும்!

## மொஹமட் முஸம்மில் கேட்கிறார்

கொழும்பு, ஓக. 15

புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மீதான தடை நீக்கப்பட்டதன் மூலம் தேசிய பாதுகாப்புக்கான அச்சுறுத்தல் நீங்கிவிட்டதா என்று தேசிய சுந்தந்திர முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் மொஹமட் முஸம்மில் கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்துடன், தடைநீக்கம் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு தெளிவுப்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தால் சில புலம்பெயர் தமிழ் அமைப்புக்களுக்கு தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில், அந்தத் தடை தற்போது நீக்கப்பட்டுள்ளதாக ஊடகங்களின் வாயிலாக அறிந்துகொண்டோம்.

அதற்கமைவாக உலக தமிழர் பேரவை, பிரித்தானியா தமிழர் பேரவை, கனேடிய தமிழர் காங்கிரஸ் உள்ளிட்ட ஆறு அமைப்புக்களின் மீதான தடைகள் நீக்கப்பட்டுள்ளன.

உண்மையில் இந்த அமைப்புகளை தடைசெய்வதற்கான காரணம் என்னவென்றே தற்போதைய அரசாங்கத்திடம் கேள்வி எழுப்புகின்றோம். நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருந்ததன் காரணமாகவே இந்த அமைப்புகளுக்கு தடை விதிக்கப்பட்டது.

இவ்வாறான சூழ்நிலையில், தேசிய பாதுகாப்புக்கான அச்சுறுத்தல் தற்போது நீங்கிவிட்டதா என்றே கேள்வி எழுப்புகின்றோம்.

அரசாங்கத்தின் மாற்றத்துடன் புலம்பெயர் தமிழர்கள் தங்கள் ஈழக் கனவவை கைவிட்டுவிட்டனரா?, புலம்பெயர் தமிழர்களுக்கு தற்போது ஈழம் அவசியமில்லையா?, புலம்பெயர் தமிழர்கள் தங்கள் செயல்பாடுகள் அனைத்தையும் நிறுத்திவிட்டனரா?

எனவே இந்த அமைப்புக்கள் மீதான தடைநீக்கம் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு அறிவித்தல் ஒன்றை விடும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

அதேபோன்று இந்த அமைப்புக்கள் மீதான தடையை நீக்குவதற்கு எது காரணமாக அமைந்தது என்பதை தெரிந்துகொள்வதற்கான உரிமை நாட்டின் அரசியல் கட்சிகளுக்கும் நாட்டு மக்களுக்கும் இருக்கின்றது.

எனவே இது தொடர்பிலான உண்மையான தகவலை பாதுகாப்பு அமைச்சு வெளிப்படுத்த வேண்டும் - என்றும் சொன்னார். (கே)

# சட்டவிரோத மின்வேலியால் மூன்று யானைகள் உயிரிழப்பு

கொழும்பு, ஓக. 15

சட்டவிரோத மின்கம்பியில் சிக்கி மூன்று காட்டு யானைகள் நேற்று உயிரிழந்தன என்று அநுராதபுரம் வனஜீவராசிகள் அலுவலகம் தெரிவித்துள்ளது.

மிகிந்தலை புதுக்குளத்தில் வைக்கப்பட்ட சட்டவிரோத மின்கம்பியில் சிக்கியே இந்த யானைகள் உயிரிழந்தன.

இந்தக் கிராமத்துக்குள் நேற்றுமுன்தினம் இரவு யானைக்கூட்டம் ஒன்று புகுந்தது. இதில் 3 யானைகளே சட்டவிரோத மின்வேலியில் சிக்கி உயிரிழந்தன.

தனது கால்நடைகளை பார்ப்பதற்காக கிராமத்தின் ஊடாக சென்ற நபர் ஒருவர் யானைகளின் சடலத்தை கண்டு, வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவித்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் அனுமதியின்றி மின்சார வயர்களை பதித்த காணியின் உரிமையாளரைக் கைது செய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)

# களவாடப்பட்ட மாடு கொல்களத்தில் இறைச்சிக்கடை உரிமையாளர் கைது!

மட்டக்களப்பு, ஓக. 15

களவாடப்பட்ட மாடு ஒன்று கொல்களம் ஒன்றிலிருந்து உயிருடன் மீட்கப்பட்டது. இதையடுத்து, இறைச்சிக் கடை உரிமையாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கொக்குவில் பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு - கொக்குவில் - பாலமீன்படு கிராமத்தில் கடந்த புதன்கிழமை மாட்டுப் பட்டி ஒன்றிலிருந்து 4 மாடுகள் திருடப்பட்டன. இதையடுத்து, பட்டியின் உரிமையாளர் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்நிலையில், ஏறாவூர் பகுதியில் மாடு வெட்டும் கொல்களத்தில் களவாடப்பட்ட தனது மாடு ஒன்று கட்டப்பட்டிருப்பதை அவதானித்த பட்டி உரிமையாளர் அது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்தார்.

இதையடுத்து விசாரணை நடத்திய பொலிஸார் அந்த மாட்டை மீட்டதுடன், அதை இறைச்சியாக்கக் கொண்டு வந்த இறைச்சிக்கடை உரிமையாளரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபர் மட்டக்களப்பு நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டு, அவரின் உத்தரவின்பேரில் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.08.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## இந்திய சுதந்திர தினம் (இன்று):

# பணக்காரர்கள் பெருகும் நாட்டில், ஏழைகள் துயரப்படுவதன் "ரகசியம்" என்ன?

**-ஜி எஸ் ராம்மோகன்**



சுதந்திர இந்தியாவின் 75 ஆண்டுகால பயணத்தைப் பற்றிய பெரும்பாலான பகுப்பாய்வுகள், கடந்த 30 ஆண்டுகளைச் சுற்றியே உள்ளன. இந்தக் காலக்கட்டத்தில் இந்தியா எப்படி அடையாளம் காண முடியாத அளவுக்கு மாற்றமடைந்துள்ளது என்பதை அவை வலியுறுத்துகின்றன.

தொலைபேசி இணைப்புக்காக ஒருவர் தனது தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினரிடம் எப்படி நடையாக நடக்கவேண்டும், எரிவாயு இணைப்பைப் பெற ஒருவர் எப்படி பல மாதங்கள் காத்திருக்க வேண்டும், தங்கள் சொந்தபந்தம் மற்றும் அன்புக்குரியவர்களிடம் பேசுவதற்காக பொது தொலைபேசி பூத்துகளுக்கு வெளியில் எப்படி மணிக்கணக்கில் வரிசையில் காத்திருக்க வேண்டும் என்பதைப் பற்றி பலர் தங்கள் எழுத்துகளில் நினைவுபடுத்துகிறார்கள்.

1990கள் மற்றும் அதற்குப் பிறகு பிறந்தவர்களுக்கு இவை பற்றித் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால் முந்தைய தலைமுறைகள் நிதர்சனமாகக் கண்ட உண்மைகள் இவை.

ஸ்கூட்டர் வாங்க பல வருடங்கள் காத்திருக்க வேண்டிய நிலையிலிருந்து இன்று இருக்கும் நிலைக்கு நாம் எப்படி மாறியிருக்கிறோம் என்பதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். இவையெல்லாம் கண்ணுக்குத் தெரியும் உண்மைகள். தொழில்நுட்ப நுகர்வு, விநியோகச் சங்கிலிகளை மேம்படுத்துதல், உரிமம் வழங்கும் செயல்முறையில் சீர்திருத்தங்கள் ஆகியவை மாற்றத்தில் முக்கியப் பங்கு வகித்தன. சேவைத் துறையிலும் அன்றாடப் பணிகளிலும் தனிமனித விருப்பு வெறுப்பு, பெருமளவு முடிவுக்கு வந்தது. இது நடுத்தர மக்களின் அன்றாட வாழ்க்கையைப் பெரிதும் எளிதாக்கியது.

90களில் பொருளாதார சீர்திருத்தங்கள் முழு வீச்சில் தொடங்கப்பட்டன. அதன் பிறகு பல மாற்றங்கள் மிகவும் தெளிவாகத் தெரியத் தொடங்கின. இருப்பினும், சேவைத் துறையில் மிகவும் வெளிப்படையாகக் காணப்படும் இந்த மாற்றங்களைத் தவிர வேறு சில அடிப்படைப் பிரச்னைகள் விவாதிக்கப்பட வேண்டியவை. முதலில் இரண்டு முக்கிய விஷயங்களைப் பார்ப்போம். வறுமை குறைந்துள்ளதையும், சமத்துவமின்மை அதிகரித்து வருவதையும் நாம் அலசுவோம்.

75 ஆண்டுகளில் ஏற்பட்ட இரண்டு முக்கிய மாற்றங்கள், வறுமையில் சரிவு மற்றும் ஏற்றத்தாழ்வுகள் அதிகரிப்பு.

**வறுமை குறைந்திருக்கிறதா?**

1994 மற்றும் 2011ஆம் ஆண்டுக்கு இடையே இந்தியாவால் வறுமையை மிக வேகமாகக் குறைக்க முடிந்தது. இந்தக் காலகட்டத்தில் வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்களின் சதவீதம் 45 இல் இருந்து 21.9 ஆகக் குறைக்கப்பட்டது. எண்ணிக்கையை வைத்துப் பார்த்தால், 13 கோடி பேர் தீவிர வறுமையில் இருந்து மீட்கப்பட்டனர். 2011க்குப் பிந்தைய காலத்திற்கான தரவு இன்னும் அதிகாரபூர்வமாக வெளியிடப்படவில்லை. கணக்கெடுப்பு நடத்தப்பட்டது, ஆனால் அறிக்கை இன்னும் வெளியிடப்படவில்லை.

இருப்பினும், உலக வங்கியின் புள்ளிவிவரங்களின் படி, 2019ஆம் ஆண்டுக்குள் தீவிர வறுமையின் சதவீதம் 10.2 வீதமாகக் குறைந்துள்ளது. நகர்ப்புற இந்தியாவுடன் ஒப்பிடும்போது ஊரக இந்தியா இதில் சிறந்து விளங்கியது. 2019ஆம் ஆண்டுக்குப் பிறகான புள்ளிவிவரங்கள் இன்னும் கிடைக்கப்பெறவில்லை.

வறுமையில் வாடும் மக்களின் சதவீதத்தை ஒற்றை இலக்கமாகக் குறைக்க 75 ஆண்டுகள் ஆனது என்பதையும் 30 ஆண்டுக்கால பொருளாதாரச் சீர்திருத்தங்கள் அதில் முக்கியப் பங்காற்றியுள்ளன என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். மக்கள்தொகையில் கிட்டத்தட்ட பாதிப் பேர், அதாவது சுமார் 45 வீதம் 30 ஆண்டுகளுக்கு முன்பு வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்தனர். இன்று அந்த எண்ணிக்கை 10 வீதமாக உள்ளது. இது ஓர் அற்புதமான மாற்றம்.

இந்த 30 ஆண்டுகளில் கரீபி ஹட்டாவ் (வறுமையை ஒழிப்போம்) என்ற முழக்கத்தைச் செயல்படுத்துவதில் மிகப்பெரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது.

**ஏற்றத்தாழ்வுகள் அதிகரிப்பு**

அதேநேரம், சீர்திருத்தங்கள் அமல்படுத்தப்பட்ட இந்த 30 ஆண்டுகளில் ஏற்றத்தாழ்வுகள் அதிகரித்துள்ளன. கோடீஸ்வரர்களின் சொத்து விண்ணைத் தொட்டுள்ளது. தேசிய சொத்து மதிப்பில் கீழ் மட்டத்தில் இருப்பவர்களின் பங்கு குறைந்து வருகிறது. உலகின் பெரிய செல்வந்தர்களின் பட்டியலான போர்ப்ஸ் பட்டியலில் 90களில் இந்தியாவிலிருந்து யாரும் இல்லை. 2000ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை ஒன்பதாக இருந்தது. 2017இல் இது 119 ஆக இருந்தது. 2022 இல் இந்த எண்ணிக்கை 166 ஆக உள்ளது.

ரஷ்யாவுக்கு அடுத்தபடியாக இந்தியாவில் அதிக மகாகோடீஸ்வரர்கள் (பில்லியனர்கள்) உள்ளனர். 2017 ஆம் ஆண்டின் ஆக்ஸ்பாம் அறிக்கையின்படி, தேசிய செல்வத்தில் 77வீதம், முதல் 10 சதவீதத்தினரிடையே குவிந்துள்ளது. முதல் 1 வீதம் பேர் தேசிய செல்வத்தில் 58 சதவீதத்தை வைத்துள்ளனர். அதன்பிறகு, கோவிட் நெருக்கடி காலங்களில் கூட, உயர்மட்டத்தினர் தங்கள் வருமானத்தை அதிவேகமாக அதிகரிக்க முடிந்தது என்று ஆக்ஸ்பாம் அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

**ஊதியத்தில் பெரும் ஏற்றத்தாழ்வு**

அமைப்புசாரா தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று. அமைப்பு சார்ந்த துறையிலும், முன் எப்போதும் இல்லாத அளவுக்கு ஊதிய இடைவெளி அதிகரித்துள்ளது.

போதிய ஊதியம் இல்லாமை, ஊதிய இடைவெளி, பணி நிலைமைகள், உள்ளடக்காத வளர்ச்சி. மேற்கூறிய எல்லா பிரச்னைகளும் இந்தியாவிற்குப் பெரும் சவால்கள் என்று சர்வதேச தொழிலாளர் அமைப்பு தனது அறிக்கை ஒன்றில் கூறுகிறது. ஐடுழு உடன், அசீம் பிரேம்ஜி அறக்கட்டளையும் தங்கள் ஆய்வுக் கட்டுரை ஒன்றில் இந்தப் பிரச்னைகளைச் சுட்டிக்காட்டியுள்ளது.

சில நிறுவனங்களில் சிஇஓக்கள் கோடிக்கணக்கில் சம்பளம் வாங்கும் நிலையில், மாதம் 15000 ரூபாய் என்ற குறைவான ஊதியம் பெறும் ஊழியர்களும் உள்ளனர். சில தனியார் நிறுவனங்களில் ஊதிய இடைவெளி 1000 வீதத்திற்கும் அதிகமாக உள்ளது. பெரிய நாடுகளை நாம் கருத்தில் கொண்டால், ஊதிய இடைவெளி பட்டியலில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. இது சமத்துவமின்மையின் வளர்ச்சியை மேலும் தூண்டுகிறது. வறுமையைப் போலவே சமத்துவமின்மையும் ஒரு சமூகக் கேடு.

இந்தியாவில் செல்வத்துடன் கூடவே ஏற்றத்தாழ்வுகளும் அதிகரித்துள்ளன என்றும் அவற்றுக்கிடையே பிரிக்க முடியாத உறவு இருப்பதாகவும் புள்ளி விவரங்கள் கூறுகின்றன. இந்தியாவில் உள்ள பல ஆய்வாளர்கள் தங்கள் வசதிக்கேற்ப புள்ளிவிவரங்களைத் தேர்ந்தெடுத்து, தங்கள் பார்வையை முன்னிலைப்படுத்தி, மற்ற சிக்கல்களைத் பின்னுக்குத் தள்ளிவிடுகிறார்கள். மேலும் சிலர் சாமர்த்தியமாக, அந்தப் பிரச்னைகள் வெளியே தெரியவராமல் பார்த்துக் கொள்கின்றனர்.

**முதலாளித்துவத்தை உருவாக்கிய அரசு**

முதலாளித்துவத்தை அரசுப் பணம் மூலம் ஊக்குவிப்பது சுதந்திர இந்தியாவின் வரலாறு முழுவதும் இருந்து வருகிறது. 1955-56ல் நாடாளுமன்றத்தில் நேரு ஆற்றிய உரை இந்தத் தொழில் கொள்கையைச் சுற்றியே இருந்தது.



ரஷ்யா மற்றும் சீனாவைப் போலவே, இங்கும், எஃகு உற்பத்தியில் கவனம் செலுத்தப்பட்டது. நாடு வளர்ச்சியடைய வேண்டுமானால் அரசு மற்றும் தனியார் துறைகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்றும், இதில் அரசு முக்கிய பங்கு வகிக்க வேண்டும் என்றும் முதல் மற்றும் இரண்டாவது ஐந்தாண்டு திட்டங்களில் வலியுறுத்தப்பட்டது.

மூலதன விரிவாக்கத்திற்கு அரசு மிகவும் முக்கியமானது என்பதும் அரசு தான் முதலீட்டாளராக இருந்தது என்றும் முதலாளித்துவத்தை உருவாக்கியது என்றும் ஆரம்பத்திலேயே உணரப்பட்டது.

"பெரிய தொழிற்சாலைகளை நிறுவும் செலவை தனியார் துறையால் தாங்க முடியாவிட்டால், அரசே பொறுப்பேற்கும்" என்று இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் கூறப்பட்டது. முதல் ஐந்தாண்டுத் திட்டம் விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தாலும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தொழில்துறை அந்த இடத்தைப் பிடித்தது.

முதல் ஐந்தாண்டுத் திட்டம், உணவு தானியங்களை இறக்குமதி செய்வதன் அவசியத்தை முறியடித்து, உபரி நிலைக்கு வளர்ச்சியடைவதே இலக்கு என்று அறிவித்தது. இத்தகைய உபரி, புதிய மூலதனத்தையும் முதலாளித்துவத்தையும் உருவாக்குகிறது என்று உலகளாவிய செயல்முறைகள் கூறுகின்றன. இந்தியாவிலும் இதுவே நடந்தது.

**சீனாவுடன் ஒப்பிடும் போது 12 ஆண்டுகள் தாமதம்**

சீனாவில் சீர்திருத்தங்கள் 1978 இல் தொடங்கப்பட்டாலும், இந்தியாவில் அதுபற்றிய சிந்தனையே அந்த நேரத்தில் தான் தொடங்கியது. இந்திரா காந்தி இரண்டாவது முறையாக ஆட்சிக்கு வந்தபோது இதற்கு முக்கியத்துவம் தரப்பட்டது. இருப்பினும், அவரது திடீர் மரணத்திற்குப் பிறகு ராஜீவ் காந்தி அதை முன்னெடுத்துச் செல்ல முயன்றார். ஆனால், அந்த தசாப்தத்தில் அரசியல் குழப்பம் காரணமாக அவருடைய முயற்சிகள் எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை. ஒருவகையில், இந்தியாவில் சீர்திருத்தங்கள் 12 ஆண்டுகள் தாமதமாயின என்று சொல்லலாம்.

1991இல் பணம் செலுத்துவதில் ஏற்பட்ட நெருக்கடியின் போது தங்கத்தை அடமானம் வைக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இது சீர்திருத்தங்களைத் தவிர்க்க முடியாததாக மாற்றியது. இதையடுத்து, பி.வி. நரசிம்மராவ் சர்வதேச செலாவணி நிதியத்தின் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு சீர்திருத்தங்களைத் தொடங்கினார். திறமையான பொருளாதார நிபுணர் மன்மோகன் சிங் தலைமையில் அவை வேகமாகச் செயல்படுத்தப்பட்டன.

**தொழில்மயமாக்கலின் மூன்று கட்டங்கள்**

பி.வி. நரசிம்மராவ் மற்றும் மன்மோகன் சிங்கின் பங்களிப்புக்கு அங்கீகாரம் அளிக்கும் அதேநேரம் இந்தச் சீர்திருத்தங்களுக்குப் பின்னால் ஒரு வரலாற்று செயல்முறை இருந்தது என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். ஒட்டுமொத்தமாக, சீர்திருத்தங்கள் கொண்டு வந்த முன்னேற்றத்தையும் இந்த முன்னேற்றம் உருவாக்கிய செல்வத்தையும் அங்கீகரிக்கும் அதே வேளையில், வறுமையைக் குறைத்ததற்காக அவர்களைப் பாராட்ட வேண்டும்.

அதே சமயம், சமத்துவமின்மை மிக அதிகளவில், அபாயகரமான வேகத்தில் உயர்ந்து வருகிறது என்பதையும் மறந்துவிடக் கூடாது. "வறுமையே புரட்சிக்கும் குற்றங்களுக்கும் பெற்றோர்" என்று அரசு அறிக்கையே சுட்டிக்காட்டியுள்ளது. எனவே ஏற்றத்தாழ்வுகளின் எழுச்சியைத் தடுக்க அரசு தன்னால் இயன்ற அனைத்தையும் செய்ய வேண்டும்.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.00 மணி : இயற்கை வழி



7.05 மணி : உளவியல் கருத்து-
உளவளத்துனையாளர் யாழ் பாவாணன்



7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர்
டாக்டர் விவியன் சத்தியசீலன்
07.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கொழும்பு-16-மறு ஒளிபரப்பு
11.30 மணி : மனிதனின் மறுபக்கம்

**பகல்**

12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
நகைச்சுவை நிகழ்ச்சி
1.00 மணி : அறிந்தும் அறியாமலும் (மறு ஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-தர்மதுரை,ரம்மி
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : ரெயிலர் ரைம்
6.30 மணி : நலந்தானா



**இரவு**

7.00 மணி : சொற்சமர் -பாடசாலை
மாணவர்களுக்கா விவாத நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
9.30 மணி: மீம்ஸ் பேட்டை
10.00 மணி : நேருக்கு நேர்

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**காலை**

5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழகக்கோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள்
(மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்களும் திருகோணமலை
(சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை
(திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம்
(மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு